
இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com

தினபூமி
thinaboomi.com

இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com





**அமெரிக்காவில் அதிபர் ஜோபைடனுடன் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சந்திப்பு**

...2-ம் பக்கம்

**சந்திரபாபு நாயுடுவுக்கு மேலும் 2 நாட்களுக்கு காவல் நீட்டிப்பு**

...3-ம் பக்கம்

**உலகக்கோப்பை கிரிக்கெட் தொடருக்கான பரிசுத்தொகை அறிவிப்பு**

...7-ம் பக்கம்






● மகளிருக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதா பாராளுமன்ற இரு சபைகளிலும் நிறைவேறி விட்டது. இதையடுத்து பிரதமர் மோடிக்கு பாராளுமன்ற வளாகத்தில் ஒன்று கூடிய மாநிலங்களவை பெண் எம்.பி.க்கள் பூங்கொத்து கொடுத்தும், இனிப்பு வழங்கியும் வாழ்த்து தெரிவித்தனர்.

### நிறைவேறியது மகளிர் இட ஒதுக்கீடு மசோதா:

# பாராளுமன்ற இரு அவைகளும் காலவரையின்றி ஒத்திவைப்பு

## பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்த பெண் எம்.பி.க்கள்

புதுடெல்லி, செப்.23-

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேறியதை தொடர்ந்து இரு அவைகளும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பெண் எம்.பி.க்கள் பிரதமருக்குவாழ்த்து தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் மக்களவையில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் மசோதா சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, மாநிலங்களவையில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா மீது பல்வேறு கட்சிகளின் எம்.பி.க்கள் பேசினர்.

இந்த மசோதா மீது பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மசோதாவுக்கு முழு ஆதரவு தெரிவிக்கிறேன். இது நிறைவேற்றப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம் என்றார்.

இவ்வாறு 7 மணி நேரத்துக்கும் மேலாக நடந்த விவாதங்கள் நிறைவடைந்த நிலையில், இரவில் மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது. மசோதாவுக்கு ஆதரவாக 215 உறுப்பினர்கள் வாக்களித்தனர். யாரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. இதன்மூலம் மாநிலங்களவையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா ஒருமனதாக நிறைவேறியது.

இதையடுத்து, கூட்டத்தொடர் முடிந்து வெளியே வந்த பிரதமர் மோடிக்கு அனைத்து பெண் எம்.பி.க்களும் வாழ்த்து தெரிவித்தனர். அவர்கள் பிரதமர் மோடிக்கு பூங்கொத்து கொடுத்தும், இனிப்புகள் வழங்கியும் வாழ்த்துகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், வரலாற்றுச் சிறப்புமிக்க மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறியதும் பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் நிறைவடைந்தது. அதன்பின் இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன.

முன்னதாக கூட்டத்தொடர் முடிந்து வெளியே வந்த பிரதமர் மோடிக்கு அனைத்து எம்.பி.க்களும் வாழ்த்து தெரிவித்தனர். அதன்பின், பாராளுமன்ற வளாகத்தில் ஒன்று கூடிய மாநிலங்களவை பெண் எம்.பி.க்கள் பிரதமர் மோடிக்கு பூங்கொத்து கொடுத்தும், இனிப்பு வழங்கியும் வாழ்த்துகள் தெரிவித்தனர். மேலும், அவர்கள் அனைவரும் பிரதமர் மோடியுடன் சேர்ந்து நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

### தீபாவளி பண்டிகைக்கு 2 மணி நேரம் மட்டும்

# சுற்றுச்சூழலை பாதிக்காத பட்டாசுகளை வெடிக்க வேண்டும்

## சரவெடிக்கு அனுமதி கோரிய மனுவை தள்ளுபடி செய்து சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, செப். 23-

காலையில் 6 மணியில் இருந்து 7 மணி வரையிலும், இரவில் 7 மணியில் இருந்து 8 மணி வரையிலும் என 2 மணி நேரம் மட்டுமே சுற்றுச்சூழலை பாதிக்காத பட்டாசுளை வெடிக்க அனுமதி அளிக்கப்படுவதாக சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. மேலும் சரவெடிக்கு அனுமதி கோரிய மனுவையும் தள்ளுபடி செய்து சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தீபாவளி பண்டிகை நேரத்தில் வெடிக்கப்படும் பட்டாசுகளால் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுகிறது. எனவே பட்டாசு தயாரிக்க, விற்பனை செய்ய, பாதுகாத்து வைக்க தடை விதிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் அர்ஜுன் கோபால், கோபால் சங்கர நாராயணன் ஆகியோர் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இதனை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு அது தொடர்பாக மத்திய அரசு மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் விளக்கங்களை கேட்ட பின்னர் கடந்த 2018-ம் ஆண்டு பட்டாசு வெடிப்பதற்கு அதிரடியாக கட்டுப்பாடுகளை விதித்து உத்தரவிட்டது.

இதன்படி பேரியம் என்கிற அலுமினிய பொருட்களுடன் கூடிய சரவெடிக்கு தடை விதிக்கப்பட்டதுடன், குறைந்த அளவிலான சத்தம் மற்றும் புகையை வெளியிடக்கூடிய பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது.

அதிக அளவில் அலுமினியம் சேர்க்கப்பட்ட பட்டாசுகளை விற்பனை செய்யக்கூடாது. ஆன்லைனில் பட்டாசுகளை விற்பனை செய்யக் கூடாது என்பது போன்ற கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில் தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் வேளையில் பட்டாசு தயாரிப்பு நிறுவனங்கள் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பேரியம் இல்லாத பட்டாசுகளை தயாரிப்பது சிரமமாகும். அது சரவெடியில் குறைவான அளவே உள்ளது. எனவே அதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு இந்த வழக்கு விசாரணை நடைபெற்ற நிலையில் தேதி குறிப்பிடாமல் தீர்ப்பு தள்ளி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் ஏ.எஸ்.போபண்ணா, எம்.எம்.சுந்தரேஷ் அமர்வு சரவெடி பட்டாசு விவகாரத்தில் தீர்ப்பை வழங்கியது.

அதில் சரவெடி பட்டாசுக்கு விதிக்கப்பட்ட தடை நீடிப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர். சரவெடியில் பேரியம் வேதிப்பொருள் சேர்ப்பது அத்தியாவசியமாகிறது. அது சுற்றுச்சுழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்கிற பட்டாசு நிறுவனங்களின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. அவர்களது

(கடைசி பக்கம் பார்க்க)

# மகளிர் உரிமை தொகை திட்டம் மூலம் கிராமங்களில் பணப்புழக்கம் அதிகரிப்பு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, செப். 23-

மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் கிராமங்களில் பணப்புழக்கம் அதிகரித்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் மாநில திட்டக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் துணைத் தலைவர் ஜெயரஞ்சன் மற்றும் குழு உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில் காலை சிற்றுண்டி திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-



அரசை அறிவுறுத்தக் கூடிய அமைப்பாக திட்டக்குழு உள்ளது. அரசுக்கும், மக்களுக்கும் இடைவெளி ஏற்படாமல் மாநில திட்டக்குழு செயல்படுகிறது. விடியல் பயணம், காலை உணவுத் திட்டத்தின் தாக்கம் பற்றி திட்டக்குழு அறிக்கை வழங்கியது பயனளித்தது. நான் முதல்வன் திட்டத்தின் தாக்கம் குறித்து ஆராய்ந்து திட்டக் குழு அறிக்கை அளிக்க வேண்டும்.

நான் முதல்வன் திட்டம் மூலம் 13 லட்சம் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நான் முதல்வன் திட்டம் மூலம் மாணவர்கள் திறன் மிகுந்தவர்களாக உருவாகி வருகின்றனர். நான் முதல்வன் திட்டத்தை மேலும் செழுமைப்படுத்த ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

விடியல் பயண திட்டம் மூலம் மகளிருக்கு மாதம் ரூ.1000 சேமிப்பு கிடைக்கிறது. சமூகத்தில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து, வேலைக்கு செல்லும் பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மகளிர் உரிமை தொகை பெற்ற பயனாளிகள் மகிழ்ச்சி தெரிவித்து வருகின்றனர். மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் கிராமங்களில் பணப்புழக்கம் அதிகரித்துள்ளது. உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் பெண்களுக்கு பொருளாதார சுதந்திரம் கிடைத்துள்ளது.

அரசின் திட்டங்கள் மக்களுக்கு முழுமையாக சென்றடைய வேண்டும். செலவின அடிப்படையில் இல்லாமல் கிடைக்கும் பயன் அடிப்படையில் திட்டங்களை அளவிட வேண்டும். மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் அனைவருக்கும் சுகாதாரத்தை உறுதி செய்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மகளிர் உரிமை திட்டத்துக்கு புதிய பயனாளிகள் விண்ணப்பிக்கலாம்

## தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, செப். 23-

மகளிர் உரிமை திட்டத்துக்கு விண்ணப்பிக்க தவறிய புதிய பயனாளிகள் விண்ணப்பிக்கலாம் என அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

மகளிர் உரிமைத் திட்டத்துக்கு ஏற்கனவே விண்ணப்பிக்க முடியாமல் போன பெண்கள் தற்போது விண்ணப்பிக்கலாம் என்றும், மேல்முறையீடு செய்ய அளிக்கப்பட்டுள்ள அவகாச காலத்திலேயே புதியவர்களும் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணாவின் 115-வது பிறந்த நாளையொட்டி மகளிர் உரிமை தொகை திட்டத்தை காஞ்சிபுரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 15-ம் தேதி தொடங்கி வைத்தார்.

இந்த சூழலில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் நிராகரிக்கப்பட்டவர்கள் மீண்டும் இ சேவை மூலம் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்தது. இந்த சூழலில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள் நேற்று முன்தினம் முதல் மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்று தமிழக அரசு தெரிவித்து. தகுதியான நபர்களுக்கு 30 நாட்களுக்குள் கோட்டாட்சியர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்தது.

இந்நிலையில் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் புதிய பயனாளிகளும், விடுபட்டவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் உரிமைத் தொகை பெற இதுவரை விண்ணப்பிக்காதோர் மேல் முறையீடு செய்ய வழங்கப்பட்டிருக்க கூடிய அதே கால அவகாசத்தில் புதிதாக விண்ணப்பிக்கலாம். மகளிர் உரிமைத்தொகை திட்டத்திற்கு இவ்வளவு பயனாளிகள் என்ற இலக்கு கிடையாது. இ-சேவை மையங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சி துணை தலைவர் இருக்கை விவகாரம்:

# சபாநாயகர் அப்பாவுவை சந்தித்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கடிதம்

சென்னை, செப். 23-

சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கையை ஆர்.பி. உதயகுமாருக்கு அளிப்பது குறித்து கடிதம் மூலம் எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி சபாநாயகரிடம் கடிதம் கொடுத்துள்ளதாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் கூறினார்.

வருகின்ற அக்டோபர் 9-ம் தேதி தமிழக சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் தொடங்க உள்ளது. இந்நிலையில், தலைமைச் செயலகத்தில், அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் திண்டுக்கல் சீனிவாசன், செங்கோட்டையன், செல்லூர் ராஜூ, விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் சபாநாயகர் அப்பாவுவை நேற்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர்.

பின்னர் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், அ.தி.மு.க.வினர் அனைவரும் ஒருங்கிணைந்து தீர்மானம் நிறைவேற்றி, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கையை ஆர்.பி. உதயகுமாருக்கு வழங்க வேண்டும் என்று,ஏற்கெனவே இரண்டு முறை சபாநாயகரிடம் கடிதம் அளித்திருந்தோம்.

இன்று(நேற்று) மூன்றாவது முறையாக கடிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் சபாநாயகர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கை வழங்குவது, பரிசீலனையில் இருப்பதாக தெரிவித்திருக்கிறார். எங்களைப் பொறுத்தவரையில், நீங்கள் எங்களுக்கு ஒதுக்க வேண்டிய இடத்தை, இதற்கு முன்பு எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆட்சி நடந்தபோது, எதிர்க்கட்சித் தலைவராக, இன்றைய முதல்வர் ஸ்டாலின், துணைத் தலைவராக இன்றைய நீர்வளத்துறை அமைச்சரான துரைமுருகனுக்கு இருக்கை ஒதுக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், எதிர்க்கட்சித் தலைவராக தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தும், துணைத் தலைவராக பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோருக்கு ஒதுக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இது சட்டமன்ற விதி, மரபின் அடிப்படையில் நிறைவேற்றப்படும் ஒன்றாக இருந்து வருகிறது.

அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், இயங்கும் இந்த இயக்கத்துக்கு, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கையை ஆர்.பி.உதயகுமாருக்கு வழங்க வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் அதனை பரிசீலிப்பதாக கூறியிருக்கிறார்.

நாங்கள் கொடுத்துள்ள கடிதத்தில், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கையை எங்களுக்கு கொடுக்கிறீர்களா? இல்லையா? என்பதை கடிதம் மூலம் எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று தெளிவாக வலியுறுத்தியுள்ளோம்.

கடிதத்துக்கான பதில் கிடைத்தவுடன் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி எடுப்பார் என்று கூறினார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
| --- | --- |
| -221.09 | -68.10 |
| பாயின்ட் 66009.15 | பாயின்ட் 19675.25 |



**தங்கம்**
1 சவரன் ₹44,080
1 கிராம் ₹5,510



**வெள்ளி**
1 கிலோ ₹79,000
1 கிராம் ₹79.00

**டாலர்** ₹82.93

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# அமெரிக்காவில் ஜோபைடனுடன் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சந்திப்பு

## கூடுதல் ஆயுதங்கள் வழங்குவது குறித்து பேச்சு

**வாஷிங்டன், செப். 23-**

அமெரிக்கா சென்றுள்ள உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை ஜோபைடன் மற்றும் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன் ஆகியோர் வெள்ளை மாளிகையில் வரவேற்றனர். ஓவல் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதை தொடர்ந்து ஓவல் அலுவலகத்தில் உக்ரைனுக்கு கூடுதலாக ஆயுதங்கள், ராணுவ தளவாடங்கள் வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.



உக்ரைன் மீதான ரஷ்யாவின் ராணுவ நடவடிக்கை கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இதில் உக்ரைனுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் வழங்கி வருகின்றன. இதனிடையே அமெரிக்க அரசு மேலும் தங்களுக்கு ராணுவ உதவிகளை வழங்க வேண்டும் என ஜெலன்ஸ்கி கோரிக்கை விடுத்து வருகிறார்.

இந்த நிலையில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அமெரிக்காவிற்கு சென்றுள்ளார். வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகைக்கு சென்ற ஜெலன்ஸ்கி மற்றும் அவரது மனைவி ஒலெனா ஜெலன்ஸ்கா ஆகியோரை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன் ஆகியோர் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து ஜோ பைடன் மற்றும் ஜெலன்ஸ்கி இடையே வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது உக்ரைனுக்கு கூடுதலாக ஆயுதங்கள், ராணுவ தளவாடங்கள் வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா போரை தொடங்கிய பிறகு அதிபர் ஜோ பைடன், அதிபர் ஜெலன்ஸ்கி இடையே நடைபெறும் மூன்றாவது சந்திப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று இலங்கை செல்கிறது சீன உளவு கப்பல் ஷின் யான்

## மத்திய அரசு கண்காணிப்பு

**புதுடெல்லி, செப். 23-**

சீனாவின் உளவு கப்பலான ஷின் யான்-6 இன்று (சனிக்கிழமை) இலங்கைக்கு செல்ல உள்ளது. இந்த உளவுக் கப்பல் ஷின் யான் மலேசியாவை அடுத்த மலாக்கா நீரிணை வழியாக இலங்கையை அடைகிறது. இது 17 நாட்கள் முகாமிட்டு இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளதாகவும் இலங்கை கடற்படை உறுதிப்படுத்தி உள்ளது.

சீனாவின் உளவு மற்றும் போர்க் கப்பல்களின் மூலம் 750 கி.மீ. தூரம் வரையிலான இடங்களை கண்காணிக்க முடியும். அதன்படி இந்தியாவின் ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் ஏவுதளம், கல்பாக்கம் அணுமின் நிலையம், கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் இந்தியாவின் தென் மாநிலங்களில் அமைந்திருக்கும் 6 கடற்படைத் தளங்களை இந்தக் கப்பல் மூலம் உளவு பார்க்க வாய்ப்பு உள்ளது.

இதனால், சீன கப்பல்களின் வருகைக்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அடுத்தடுத்து சீன உளவு கப்பல்களுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கி வருகிறது.

இந்த நிலையில் சீன உளவு கப்பல்கள் நுழைவதையும், அது எந்தவிதமான பணிகளில் ஈடுபடுகிறது என்பதையும் ஓமன், மொரீஷியஸ் நாடுகளின் உதவியுடன் இந்தியா கண்காணிக்க உள்ளது.

# காலில் விழுந்த வானதி சீனிவாசனை செல்லமாக கடிந்து கொண்ட பிரதமர்

**புதுடெல்லி, செப். 23-**

காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க முயன்ற வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ.வை பிரதமர் மோடி, காலில் விழக் கூடாது என செல்லமாக கடிந்து கொண்டார்.

பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தில் மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டு இரண்டு அவைகளிலும், அனைத்து கட்சிகள் உறுப்பினர்களுடன் ஏகபோக ஆதரவுடன் நிறைவேறியது. இதற்கு பிரதமர் மோடியை அனைவரும் பாராட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று காலை டெல்லி பா.ஜ.க. தலைமை அலுவலகத்திற்கு வந்த பிரதமர் மோடிக்கு மகளிரணி சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது தமிழகத்தைச் சேர்ந்த எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன், மோடி காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க முயன்றார்.

இதை சற்றும் எதிர்பார்க்காத பிரதமர் மோடி சட்டென பின் நகர்ந்தார். அத்துடன் நோ... நோ... காலில் விழக்கூடாது என செல்லமாக கடிந்து கொண்டார்.

வானதி சீனிவாசன் பா.ஜ.க.வின் தேசிய மகளிர் அணி தலைவியாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான வீடியோ சமூக வலை தளங்களில் வைரலாகி வருகிறது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 4,421 கனஅடியாக அதிகரிப்பு

**சேலம், செப். 23-**

தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 4 ஆயிரத்து 421 கனஅடியாக அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து கடந்த 3 மாதத்திற்கும் மேலாக காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்தது.

இதையடுத்து குறுவை பயிர்களை காப்பாற்ற கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விட உத்தரவிடக்கோரி தமிழக அரசு காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் சுப்ரீம் கோர்ட்டில் முறையீடு செய்தது.

அதை தொடர்ந்து முதல் கட்டமாக 15 நாட்களுக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்க உத்தரவிடப்பட்டது. தொடர்ந்து 2-வது கட்டமாகவும் 15 நாட்களுக்கு 5ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்க உத்தரவிட்டது. ஆனால் கர்நாடக அரசு அந்த உத்தரவை நடைமுறைப்படுத்தவில்லை.

இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்து காணப்பட்டது. இதற்கிடையே கடந்த ஒரு வாரமாக தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த 18-ம் தேதி மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 2ஆயிரத்து 556 கனஅடி நீர் வந்தது. 19-ம் தேதி 2ஆயிரத்து 844 கனஅடி தண்ணீர் வந்தது. 20-ம் தேதி நீர்வரத்து 2ஆயிரத்து 938 கனஅடியாக அதிகரித்தது. நேற்று முன்தினம் 3ஆயிரத்து 367 கனஅடியாக அதிகரித்தது.

நேற்று காலை நிலவரப்படி மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 4ஆயிரத்து 421 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் 38.19 அடியாகவும், அணையில் இருந்து வினாடிக்கு 6ஆயிரத்து 500 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது.

# கனடாவுடன் இணைந்து செயல்பட வேண்டும்: இந்தியாவுக்கு ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு

**நியூயார்க், செப். 23-**

காலிஸ்தான் பயங்கரவாதி கொலையில் நீதி வழங்குவதற்கு கனடாவுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று இந்தியாவுக்கு ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

இந்த விஷயத்தை (நிஜ்ஜர் கொலை) இந்திய அரசு தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் முழு வெளிப்படைத்தன்மையை வெளிப்படுத்தவும், பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிப்படுத்தவும் எங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என கூறினார்.

இந்தியாவின் விசா ரத்து நடவடிக்கை குறித்த கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது, நாம் சட்டத்தின் ஆட்சி நடைபெறும் நாடு. கனடா நாட்டு குடிமக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், நமது மதிப்புகள் மற்றும் சர்வதேச விதிகள் அடிப்படையிலான ஒழுங்கை நிலைநிறுத்தவும் தேவையான பணிகளை நாங்கள் தொடர்ந்து செய்வோம். இப்போது எங்கள் கவனம் அது தான் என்றும் அவர் கூறினார்.

# பெட்ரோல், டீசல் ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதித்தது ரஷ்யா

**மாஸ்கோ, செப். 23-**

உள்நாட்டில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் விதமாக பெட்ரோல் மற்றும் டீசல் ஏற்றுமதிக்கு ரஷ்யா தற்காலிக தடை விதித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் இந்த போர் காரணமாக உலகளாவிய அளவில் உணவு தட்டுப்பாடு, பொருளாதார மந்தநிலை உருவாகும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதற்கிடையே மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு பொருளாதார அளவில் பல்வேறு தடைகளை விதித்துள்ளன. இதனால் ரஷ்யாவில் பணவீக்கம், விலைவாசி ஏற்றம் அதிகரித்து மக்கள் அவலநிலையை எதிர்கொண்டு வருகிறார்கள்.

ரஷ்யாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை அதிகரித்து காணப்படுகிறது. இந்த நிலையில் உள்நாட்டில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் விதமாக பெட்ரோல் மற்றும் டீசல் ஏற்றுமதிக்கு ரஷ்யா தற்காலிக தடை விதித்துள்ளது. ரஷ்யா ஒரு நாளைக்கு 9 லட்சம் பேரல்கள் என்ற வகையில் டீசலை ஏற்றுமதி செய்கிறது. 60 ஆயிரம் முதல் ஒரு லட்சம் பேரல்கள் என்ற வகையில் பெட்ரோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு வந்த நிலையில், ரஷ்யாவில் எரிபொருள் விலை 4 சதவீதம் குறைந்துள்ளது. இந்த தற்காலிக தடையால் உலக மார்க்கெட்டில் விலை உயர வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது. யூரேசியன் பொருளாதார யூனியன் வர்த்தக அமைப்பில் உள்ள அர்மேனியா, பெலாரஸ், கிர்கிஸ்தான், கஜகஸ்தான் நாடுகளுக்கு இந்த தடை கிடையாது.

# மக்களவையில் பா.ஜ.க. எம்.பி ரமேஷ் பிதுரி சர்ச்சை பேச்சு

## சபாநாயகர் ஓம் பிர்லா கடும் எச்சரிக்கை

**புதுடெல்லி, செப். 23-**

மக்களவையில் பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி டேனிஷ் அலி குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசிய பா.ஜ.க. எம்.பி.க்கு சபாநாயகர் ஓம் பிர்லா கடும் எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் கடந்த 18-ம் தேதி தொடங்கியது .புதிய பாராளுமன்ற கட்டிடத்தில் பாராளுமன்ற கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தொடரில் பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதா நிறைவேறியது. முன்னதாக இந்த மசோதா மீது விவாதமும் நடைபெற்றது.

அதே போல், சந்திரயான் திட்டம் வெற்றி பெற்றது குறித்தும் விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தின் போது பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி டேனிஷ் அலி குறித்து பா.ஜ.க. எம்.பி ரமேஷ் பிதுரி கூறிய கருத்து கடும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பா.ஜ.க. எம்.பி, சர்ச்சைக்குரிய அந்த வார்த்தையை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி விமர்சித்துள்ளார். இதற்கு எதிர்க்கட்சி எம்.பிக்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர்

உடனடியாக எழுந்த மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பா.ஜ.க. எம்.பி.யின் பேச்சுக்கு தான் மன்னிப்பு கோருவதாக கூறினார். எம்.பியின் சர்ச்சைக்குரிய பேச்சு அவைக்குறிப்பில் இருந்தும் நீக்கப்பட்டது. மேலும் சபாநாயகர் ஓம் பிர்லாவும் கடும் எச்சரிக்கை விடுத்தார்.

எனினும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள், பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் பிதுரியை அவையில் இருந்து சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்றும் பாராளுமன்றத்தை மட்டும் இல்லை, ஒவ்வொரு இந்தியனையும் அவமதித்து விட்டதாக சாடினர்.

# இண்டியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் யார்?

## சீதாராம் யெச்சூரி தகவல்

**பாட்னா, செப். 23-**

இண்டியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர், பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு தேர்ந்தெடுக்கப்படுவார் என்று சீதாராம் யெச்சூரி கூறினார்.

பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.கவை வீழ்த்துவதற்காக 28 எதிர்க்கட்சிகள் இணைந்து இண்டியா கூட்டணியை அமைத்துள்ளன. ஆனால், மேற்கு வங்காளம், கேரளா ஆகிய மாநிலங்களில் இண்டியா கூட்டணியில் தங்கள் கட்சி இடம் பெறாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அறிவித்துள்ளது.

இந்த நிலையில், பீகார் மாநிலம் பீகார்ஷெரீப் மாவட்டம் ராஜ்கிர் என்ற இடத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நிர்வாகிகளிடையே அக்கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

பாராளுமன்ற தேர்தலுக்கான இண்டியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் தொடர்பாக கூட்டணி கட்சிகளிடையே எந்த சர்ச்சையோ, கருத்து வேறுபாடோ இல்லை. பாராளுமன்ற தேர்தல் முடிந்த பிறகு, பிரதமர் வேட்பாளர் தேர்வு செய்யப்பட வேண்டும் என்பதில் இண்டியா கூட்டணி தலைவர்கள் கருத்தொற்றுமையுடன் உள்ளனர்.

தேர்தல் முடிந்த பிறகு எதிர்க்கட்சி கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முன்னுதாரணங்கள் இருக்கின்றன. தற்போதைய ஒரே இலக்கு பா.ஜ.கவை தோற்கடிப்பது தான். எனவே, இந்த நேரத்தில், பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை தீவிரமாக எழுப்ப வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

**கண் தானம் செய்வீர்**

# தென்கொரியாவில் எதிர்க்கட்சி தலைவருக்கு பிடிவாரண்டு

**சியோல், செப். 23-**

தென்கொரியாவில் அதிபர் யூன் சுக் இயோல் தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. இங்கு பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் தலைவராக லீ ஜே-மியுங் உள்ளார். கடந்த சில வாரங்களுக்கு முன் ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலைய கழிவுநீரை கடலில் கலக்கும் திட்டத்துக்கு அரசாங்கம் அனுமதி அளித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இவர் கடந்த 3 வாரங்களாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார். இதற்கிடையே லீ மீது ஊழல் உள்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இந்த சூழ்நிலையில் அங்கு பாராளுமன்ற கூட்டத்தொடர் கூடியது. அதில் இவருக்கு எதிராக பெரும்பான்மை எம்.பி.க்கள் வாக்களித்ததால் இவரை கைது செய்ய தென் கொரிய அரசாங்கம் பிடிவாரண்டு பிறப்பித்துள்ளது. தன் மீதான இந்த குற்றச்சாட்டுகளை லீ முற்றிலும் மறுத்துள்ளார்.

**23-09-2023**




**மேஷம்:-** பணியிட மாற்றங்களை எதிர்பார்க்கலாம். தவறான வழிகளில் பணம் வரலாம். நட்பு, உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**ரிஷபம்:-** மனைவி மூலம் தனவரவு அதிகரிக்கும். சிலரின் காதல் வெற்றி பெற்று கல்யாணத்தில் முடியும். வியாபாரிகள் தங்கள் சாதுர்யமான பேச்சால் அதிகம் இலாபம் ஈட்டுவர்.

**மிதுனம்:-** தொழிலால் தனவரவு அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். பயண சுகம் ஏற்படும். தனக்கென அழகிய தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**கடகம்:-** தீய செயல்களால், கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

**சிம்மம்:-** அம்மாவின் பேச்சை கேட்டு நடந்தால் நிம்மதி ஏற்படும். தூக்கமின்மையால் சோர்வு ஏற்பட்டு முக்கிய பணிகளில் சுணக்கம் ஏற்படும். பொருட்களைப் பத்திரமாகப் பாதுகாப்பது அவசியம்.

**கன்னி:-** உடன் பிறப்புக்களின் ஒற்றுமை ஓங்கும். கோவில், குளம் பணிகளில் ஈடுபாடு கொள்வார்கள். அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். சுற்றுலாப் பயணங்கள் சென்று மகிழ்வீர்கள்.

**துலாம்:-** வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவோடு நடப்பது பதவி உயர்வுக்கு உதவும்.. வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைப்பது அவசியம்.

**விருச்சிகம்:-** உங்கள் குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். கல்வியில் தேர்ச்சியும், வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். பெரியோரின் அன்பு பொங்கும். தொழில் வளம் பெருகும்.

**தனுசு:-** பெண்கள் மூலம் விரயச் செலவுகள் ஏற்படும். தேவையற்ற பொருட்களை வாங்கிக் குவிக்காமல் செலவுகளைக் குறையுங்கள். தேவையற்ற அலைச்சல்கள் தவிர்க்க முடியாததாகும்.

**மகரம்:-** மனமகிழ்ச்சி அதிகரிக்கும் வண்ணம் தனவரவு அதிகரிக்கும். ஆரோக்கிய மேம்பாட்டால் ஆனந்தம் பெருகும். பிரிவால் ஏற்பட்ட துன்பம், இணைவால் மாறும்.

**கும்பம்:-** அரசு ஆதரவால் உத்தியோக வாய்ப்புகள் பெருகி, வாழ்க்கையில் முன்னேறும் நிலை உருவாகும். புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும். தன்னம்பிக்கை, தேக திடம், தைரியம் ஆகியவை ஓங்கும்.

**மீனம்:-** அனைத்துச் செயல்களிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். உல்லாசமான புனிதப் பயணங்கள் ஏற்படும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்புக்கு ஆதார் கட்டாயமல்ல

## சுப்ரீம் கோர்ட்டில் இந்திய தேர்தல் ஆணையம் தகவல்

**புதுடெல்லி, செப். 23-**

வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பது விருப்பத்தின் அடிப்படையிலேயே தவிர கட்டாயம் அல்ல.

இதைத் தெளிவுப்படுத்தும் விதமாகப் புதிய வாக்காளர் சேர்ப்பு, புதுப்பிப்பு ஆகியவற்றுக்கான படிவங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்படும் என சுப்ரீம் கோர்ட்டில் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள போலி வாக்காளர்களை நீக்கும் விதமாக வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க தேர்தல் ஆணையம் முடிவெடுத்ததையடுத்து, வாக்காளர் பதிவு (திருத்தம்) விதிகள், 2022 வெளியிடப்பட்டது.

இதில் புதிதாகச் சேர்க்கப்பட்ட விதியின் படி, வாக்காளர் பட்டியலில் பெயரைக் கொண்டுள்ள ஒவ்வொரு நபரும், படிவம் 6பி-ஐ நிரப்பும் வகையில் வாக்காளர் பதிவு அதிகாரியிடம் தனது ஆதார் எண்ணைத் தெரிவிக்கலாம்.

இதைத்தொடர்ந்து, வாக்காளராக தொடர்வதற்கு விதி 26பி-ன் கீழ் ஆதார் இணைப்பு கட்டாயம் இல்லை என்பதைத் தெளிவுப்படுத்தும் வகையில் படிவத்தில் மாற்றங்கள் செய்யக் கோரி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடுமாறு ஜி.நிரஞ்சன் என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட், இது குறித்து பதிலளிக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு கடந்த பிப்ரவரி 27-ல் நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

இந்நிலையில், சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையில் நீதிபதிகள் ஜெ.பி.பார்த்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன்பாக இந்த மனு விசாரணைக்கு வந்த போது, விதி 26பி-ன் கீழ் ஆதார் எண் இணைப்பு கட்டாயம் அல்ல. எனவே, இந்த நோக்கத்துக்காக கொண்டு வரப்பட்ட படிவங்களில் இதைத் தெளிவுப்படுத்தும் விதமாக மாற்றங்கள் கொண்டு வரப்படும்.

சுமார் 66 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள், தங்கள் ஆதார் எண்ணை வாக்காளர் அடையாள அட்டையுடன் ஏற்கெனவே இணைத்துள்ளனர் என தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட சுப்ரீம் கோர்ட், இந்தப் பொதுநல மனுவை தள்ளுபடி செய்தது.

# விக்ரம் லேண்டர், ரோவரில் இருந்து இதுவரை எந்த சிக்னலும் வரவில்லை: இஸ்ரோ தகவல்

**பெங்களூரு, செப். 23-**

நிலவில் தரையிறக்கப்பட்டுள்ள சந்திரயான்-3-ன் விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவரிலிருந்து இதுவரை எந்த சிக்னலும் பெறவில்லை என இஸ்ரோ தெரிவித்துள்ளது. விண்கலன்களை தொடர்பு கொள்வதற்கான முயற்சிகள் தொடரும் எனவும் தெரிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர், 'பிரக்யான்' ரோவர் வாகனம் ஆகியவை ஆகஸ்ட்23-ம் தேதி நிலவின் தென்துருவப் பகுதியில் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டன. லேண்டர் தரையிறங்கிய இடத்தில் இருந்தபடியும், ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்றும் 12 நாட்கள் ஆய்வு செய்து பல அரிய தகவல்களை நமக்கு அனுப்பின. அதன்மூலம் நிலவின் வெப்பநிலை, அங்குள்ள தனிமங்கள், நில அதிர்வின் தன்மை உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் கண்டறியப்பட்டன.

இதற்கிடையே, நிலவின் தென் துருவப் பகுதியில் இரவு சூழல் வந்துவிட்டதால் ரோவர், லேண்டர் கலன்களின் இயக்கமானது முன்னெச்சரிக்கையாக நிறுத்தி வைக்கப்பட்டு அவை உறக்க நிலையில் வைக்கப்பட்டன. ஏனெனில், லேண்டர், ரோவர் கலன்கள் சோலார் பேனல்கள் மூலம் கிடைக்கும் சூரிய ஒளி மின்சக்தியை கொண்டே இயங்குகின்றன. இரவு நேரத்தில் அவற்றால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாது என்பதால் இரு கலன்களும் முழுமையாக சார்ஜ் செய்யப்பட்டு, அவை உறக்க நிலைக்கு மாற்றப்பட்டன. நிலவில் பகல் பொழுது வந்ததும் லேண்டர், ரோவர் கலன்களை செயல்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரோ அறிவித்திருந்தது. அதன்படி, தென் துருவப் பகுதியில் தற்போது சூரிய உதயம் தொடங்கி உள்ள நிலையில், விக்ரம் லேண்டர் மற்றும் ரோவரை தொடர்பு கொள்ளும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இது இஸ்ரோவின் தரைக்கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் விண்கலன்கள் உறக்க நிலையில் இருந்து விழித்துள்ளனவா என்பதை இஸ்ரோ அறிந்து கொள்ளும். இருந்தாலும் லேண்டர் மற்றும் ரோவரில் இருந்து இதுவரை எந்த சிக்னலும் கிடைக்கப் பெறவில்லை என்றும், அதனை தொடர்பு கொள்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

# லெபனானில் அமெரிக்க தூதரக அலுவலகத்தில் துப்பாக்கிச்சூடு

**பெய்ரூட், செப். 23-**

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் அமெரிக்க தூதரக அலுவலகம் செயல்படுகிறது. இங்கு இரவு நேரத்தில் மர்மநபர் ஒருவர் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதனையடுத்து பாதுகாப்பு கருதி அங்கு ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர். அதிர்ஷ்டவசமாக இந்த துப்பாக்கிச்சூட்டில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என தூதரக செய்தித்தொடர்பாளர் ஜேக் நெல்சன் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்துக்கு இதுவரை எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இதற்கிடையே போலீசார் அந்த பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனால் அங்கு சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

## துருக்கியில் சிகிச்சை பெற்று வரும்
# 2 வயது குழந்தையை சென்னைக்கு கொண்டுவர 10 லட்சம் நிதியுதவி
### முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவு

**சென்னை, செப். 23-**

உடல் நலக்குறைவால் துருக்கியில் சிகிச்சை பெற்று வரும் 2 வயது குழந்தையை சென்னைக்கு கொண்டு வர 10 லட்சம் நிதியுதவி வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

உடல் நலக்குறைவால் துருக்கி நாட்டில் சிகிச்சை பெற்று வரும் 2 வயது குழந்தையை சென்னைக்கு ஏர்-ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வர ரூ.10 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது:-

கடந்த 07.09.2023 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த மனோஜ் என்பவர் தனது 2 வயது பெண் குழந்தையுடன் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் இருந்து சென்னைக்கு விமானத்தில் வந்து கொண்டிருந்து போது நடுவானில் அவரது இரண்டு வயது பெண் குழந்தை சந்தியாவிற்கு கடுமையான உடல்நலக்குறைவு ஏற்பட்டு, அவசரமாக துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் விமானம் தரையிறக்கப்பட்டது

அங்கு இஸ்தான்புல் மெடிக்கானா மருத்துவமனையில் குழந்தை சந்தியா அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவசர மற்றும் தீவிர சிகிச்சையின் பொருட்டு அவர்களின் மொத்த கையிருப்பு பணமும் செலவழிந்த நிலையில் மேல் சிகிச்சை செய்திட தமிழகம் கொண்டு வர மருத்துவரிடம் ஆலோசனை பெறப்பட்ட நிலையில் குழந்தை சந்தியாவிற்கு கடுமையான சுவாச பிரச்சனை இருப்பதால், மருத்துவ குழுவின் கண்காணிப்பில், சுவாச கருவிகளுடன் விமானத்தில் பயணம் மேற்கொள்ள மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இஸ்தான்புல் நகரிலிருந்து மேற்காணும் மருத்துவ வசதிகளுடன் குழந்தை சந்தியாவை தமிழகம் அழைத்து வர முதல்வரிடம் பெற்றோர் கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கையினை பரிசீலனை செய்து முதல்வர் மு.க. ஸ்டாலின், சந்தியாவினை மேல்சிகிச்சைக்கு சென்னைக்கு அழைத்து வர ரூபாய் 10 லட்சம் அளித்து உத்தரவிட்டுள்ளார்.

தற்போது அயலகத் தமிழர் நலத்துறை வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சென்னை அழைத்து வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## மணியம்மையார் குறித்த பேச்சு: வருத்தம் தெரிவித்தார் அமைச்சர் துரைமுருகன்

**சென்னை, செப். 23-**

மணியம்மையார் குறித்த பேச்சுக்கு அமைச்சர் துரைமுருகன் வருத்தம் தெரிவித்துள்ளார்.

வேலூரில் கடந்த 17-ம் தேதி நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் பெரியார், மணியம்மை குறித்து பேசிய விவகாரம் தொடர்பாக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வருத்தம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

17.9.2023 அன்று வேலூரில் நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழா மற்றும் பவள விழா மாநாட்டில் நான் பேசும் போது, தி.மு.க.வுக்கும், ஒன்றுபட்ட வேலூர் மாவட்டத்திற்கும் இருந்த தொடர்புகளை குறித்து பேசிக் கொண்டு வரும் போது, வேலூருக்கு பிரச்சாரத்திற்கு வந்த தந்தை பெரியார் மணியம்மையார் வீட்டில் தங்குவது வழக்கம் என்பார்கள். மணியம்மையாருடைய கட்சிப் பணியை பார்த்த தந்தை பெரியார் மணியம்மையாரை கழகப் பணி ஆற்றுவதற்காக உடன் அழைத்துச் சென்றார். எதிர் காலத்தில் கட்சியைக் காப்பாற்ற ஒரு புத்திசாலி பெண் கிடைத்து விட்டார் என்கிற வகையில் மணியம்மையாரை பெரியார் திருமணம் செய்து கொண்டார். இது பொருந்தா திருமணம் என்று அண்ணா திராவிட கழகத்திலிருந்து வெளியேறினார். இது தான் அன்றைய தினம் நான் பேசிய பேச்சின் சாரம். இதில் ஒரு தவறு எங்கே நடந்தது என்றால், அழைத்துக் கொண்டு போனார் என்பதற்கும் கூட்டிக் கொண்டு போனார் என்பதற்கும் மலைத்த வேறுபாடு இருப்பதை நாள் உணர்கிறேன். என்னுடைய இந்த பேச்சு தமிழினத் தலைவர் வீரமணிக்கும், தந்தை பெரியார் மற்றும் மணியம்மையார் மீது அடங்கா பற்று கொண்ட தோழர்களுக்கும் வருத்தம் தந்திருப்பதாக எனக்கு செய்திகள் வருகின்றன. இப்படிப்பட்ட ஒரு வார்த்தையை நான் என் பேச்சில் அந்தக் கூட்டத்தில் உபயோகப்படுத்தியதற்காக நான் என் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தந்தை பெரியார் இடத்திலும், ஆசிரியர் வீரமணியார் இடத்திலும் நான் எவ்வளவு கொள்கைப் பிடிப்பு கொண்டவன் என்பதை வீரமணியார் அறிவார். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

# மகளிர் இடஒதுக்கீட்டால் அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கும்
### பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

**புது டெல்லி, செப். 23-**



மகளிர் இடஒதுக்கீட்டால் அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கும் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

மகளிருக்கான இடஒதுக்கீட்டு மசோதா மக்களவை, மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டதற்கு பிரதமர் மோடி மற்றும் மத்திய அரசுக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்து கூறி வருகின்றனர். இந்த நிலையில், மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டதையடுத்து நேற்று டெல்லி பா.ஜ.க. தலைமை அலுவலகத்திற்கு வந்த பிரதமர் மோடிக்கு பா.ஜ.க மகளிர் அணி, தொண்டர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். அதன் பின்னர் பிரதமர் மோடி பேசியதாவது:- நாட்டின் அனைத்து பெண்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டாண்டு காலமாக மகளிர் மசோதாவுக்காக நாடு காத்திருந்தது. 27 ஆண்டு காலம் கிடப்பில் இருந்த மசோதாவை இரண்டே நாளில் நிறைவேற்றினோம். மகளிர் இடஒதுக்கீடு தொடர்பாக நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டோம். மகளிர் இடஒதுக்கீட்டால் அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கும். மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு பல தடைகள் இருந்தன. ஆனால் இந்த மசோதாவுக்கு பாராளுமன்றத்தில் அதிக ஆதரவு கிடைத்தது ஒரு சாதனை. இதற்காக அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், எம்.பி.க்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்கள் ஓர் உறுதி எடுத்தால், அதனை உயிரை கொடுத்தாவது நிறைவேற்றுவார்கள். குஜராத்தில் அமுல் நிறுவனம் வளர்ச்சி அடைந்ததற்கு பெண்களின் உழைப்பே காரணம். பாராளுமன்றத்தில் மகளிருக்கான இட ஒதுக்கீடு மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் பெண்கள் தலைமையிலான வளர்ச்சி மேம்படுத்துதலில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை நம் நாடு எட்டியுள்ளது. மகளிர் இடஒதுக்கீடு மசோதாவிற்கு சிலர் அரசியல் சாயம் பூச முயற்சி செய்கின்றனர். யாருடைய சுயநலமும் மகளிர் இடஒதுக்கீட்டில் தடைகளை ஏற்படுத்த அனுமதித்ததில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்லி, மும்பையில் விற்பனைக்கு வந்த ஆப்பிள் ஐபோன் 15 சீரிஸ்
### அதிகாலை 3 மணிக்கே குவிந்த இளைஞர்கள்



**புது டெல்லி, செப். 23-**

டெல்லி, மும்பையில் உள்ள ஷோரூம்களில் நேற்று முதல் விற்பனைக்கு வந்த ஆப்பிள் ஐபோனை வாங்குவதற்கு அதிகாலை முதலே இளைஞர்கள் குவிந்திருந்தனர்.

ஐபோன் 15 சீரிஸ் போன்கள் இந்தியா உட்பட உலக நாடுகளில் நேற்று முதல் விற்பனைக்கு வந்துள்ளது. ஆப்பிள் நிறுவனம் அதற்கான பணிகளை கவனித்து வருகிறது. ஐபோன் 15 சீரிஸ் போன்களை வாங்க அதிகாலை 3 மணி முதல் ஆப்பிள் சாதன ஆர்வலர்கள், டெல்லி மற்றும் மும்பையில் அமைந்துள்ள இரண்டு ஆப்பிள் ஸ்டோருக்கு வெளியே நீண்ட வரிசையில் காத்திருந்து வாங்கி சென்றனர்.

டெல்லியில் காலை 8 மணி அளவில் ஆப்பிள் ஸ்டோர் திறக்கப்பட்டது. அந்த ஸ்டோரில் உள்ள ஊழியர்கள் பகுதி பகுதியாக வாடிக்கையாளர்களிடம் போனை விற்பனை செய்து வருகின்றனர். டெல்லி மற்றும் மும்பையில் ஆப்பிள் ஸ்டோர் நிறுவப்பட்ட பிறகு சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள முதல் ஐபோன் சீரிஸாக ஐபோன் 15 அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. நான்கு மாடல்களுடன் ஐபோன் 15 சீரிஸில் ஆப்பிள் அறிமுகம் செய்துள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் இதன் முன்பதிவு தொடங்கியது. டெல்லியில் ஆப்பிள் ஸ்டோர் அமைந்துள்ள மாலுக்கு வெளியில் நீண்ட வரிசையில் நின்று ஆப்பிள் ஐபோன் -15, போன்களை ஆர்வலர்கள் காத்திருந்து வாங்கி சென்றனர்.

# சென்னையில் இன்று விநாயகர் சிலைகள் பிரமாண்ட ஊர்வலம்
### பாதுகாப்பு பணியில் 18,500 போலீசார்

**சென்னை, செப். 23-**

சென்னையில் இன்றும், நாளையும் பிரம்மாண்ட விநாயகர் சிலைகள் ஊர்வலம் நடைபெறவுள்ளதையொட்டி 18,500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விநாயகர் சதுர்த்தி பண்டிகை கடந்த 18-ம் தேதி கொண்டாடப்பட்டது. இதையொட்டி தமிழகம் முழுவதும் இந்து அமைப்புகள் சார்பில் பொது இடங்களில் விநாயகர் சிலைகள் நிறுவப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது. சென்னையில் மட்டும் 1,519 பிரமாண்ட விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு உள்ளன. தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட்ட விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்து சென்று நீர்நிலைகளில் கரைக்கும் நிகழ்வு நடைபெற்று வருகிறது. சென்னையில் இன்றும் (சனி), நாளையும் (ஞாயிறு) விநாயகர் சிலைகள் பிரமாண்ட ஊர்வலம் நடைபெற உள்ளது. பட்டினப்பாக்கம் சீனிவாசபுரம், நீலாங்கரை பல்கலைநகர், காசிமேடு மீன்பிடி துறைமுகம், திருவொற்றியூர் பாப்புலர் எடைமேடை பின்புறம் ஆகிய 4 கடற்கரை பகுதிகளில் சிலைகளை கரைப்பதற்கு போலீசார் அனுமதி வழங்கி உள்ளனர்.

விநாயகர் சிலைகள் ஊர்வலம் அசம்பாவித சம்பவங்கள் இன்றி அமைதியான முறையில் நடைபெறும் வகையில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பணியில் 16, 500 போலீசார், 2 ஆயிரம் ஊர்காவல் படை வீரர்கள் என மொத்தம் 18 ஆயிரத்து 500 பேர் ஈடுபட உள்ளனர்.


மேலும், சிலைகளை ஊர்வலமாக எடுத்து செல்வதற்கு 17 வழித்தடங்கள் பிரத்யேகமாக வகைப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் சிலை கரைக்கும் இடங்களில் தற்காலிக கட்டுப்பாட்டறைகள் மற்றும் உதவி மையங்கள் அமைக்கப்பட உள்ளது. சிலைகளை கரைக்கும் பணியில் ராட்சத கிரேன்கள் பயன்படுத்தப்பட உள்ளன. விநாயகர் சிலைகளை படகில் எடுத்து கரைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

விநாயகர் சிலைகள் ஊர்வலம் குறித்து சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் கூறுகையில்,

பொது இடங்களில் வைக்கப்பட்ட விநாயகர் சிலைகள் கரைக்கும் நிகழ்வின்போது உரிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். காவல்துறையின் கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைதியான முறையில் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் ஊர்வலமாக எடுத்துச் சென்று கடலில் கரைக்க வேண்டும். கட்டுப்பாடுகளை மீறுவோர் மற்றும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# சந்திரபாபு நாயுடுவுக்கு மேலும் 2 நாட்களுக்கு காவல் நீட்டிப்பு

**ஐதராபாத், செப். 23-**



ஆந்திர முன்னாள் முதல்வரும், தெலுங்கு தேச கட்சியின் தலைவருமான சந்திர பாபு நாயுடுவின் காவலை மேலும் 2 நாட்களுக்கு நீட்டித்து விஜயவாடா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆந்திராவில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் ஆட்சி நடக்கிறது. முதல்வராக ஜெகன் மோகன் ரெட்டி உள்ளார். இந்நிலையில் திறன் மேம்பாட்டு கழக திட்டத்தில் ரூ. 371 கோடி ரூபாய் ஊழல் செய்ததாக ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திர பாபு நாயுடு மீது ஊழல் தடுப்பு படை போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். அதன் பிறகு அவர் அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

தற்போது சந்திரபாபு நாயுடு ராஜமுந்திரி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே சந்திர பாபு நாயுடுவிடம் விசாரிக்க ஊழல் தடுப்பு படை போலீசார் முடிவு செய்துள்ளனர். இதற்காக சந்திராபாபு நாயுடுவை காவலில் எடுக்கும் நோக்கத்தில் விஜயவாடாவில் உள்ள ஊழல் தடுப்பு படையின் சிறப்பு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த மனு மீது விசாரணை நடந்தது. அப்போது வழக்கு தொடர்பாக நிறைய விஷயங்களை விசாரிக்க வேண்டி உள்ளது. இதனால் சந்திரபாபு நாயுடுவுக்கு போலீஸ் காவல் வழங்க வேண்டும் என கூறப்பட்டது. இதற்கு சந்திரபாபு நாயுடு தரப்பு வழக்கறிஞர் எதிர்ப்பு தெரிவித்து வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதிகள் வழக்கின் உத்தரவை இன்று(நேற்று) ஒத்திவைத்தார். அதன்படி நேற்று காலையில் வீடியோ கான்பரன்ஸ் மூலம் சிறையில் இருந்து சந்திரபாபு நாயுடு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். இதையடுத்து சிறப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அதாவது சந்திரபாபு நாயுடுவை ஒரு வாரகாலம் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி கோரிய கோரிக்கையை நீதிமன்றம் ஏற்க மறுத்தது. மாறாக சந்திரபாபு நாயுடுக்கு மேலும் 2 நாட்கள் நீதிமன்ற காவல் வழங்கி உத்தரவிடப்பட்டது.

நேற்றைய தினம் சந்திராபாபு நாயுடுவின் நீதிமன்ற காவல் முடிவடைய உள்ள நிலையில் அவரது நீதிமன்ற காவல் மேலும் 2 நாட்கள் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் அவர் அடுத்த 2 நாட்கள் சிறையிலேயே இருக்க நேரிடும்.

## மகளிர் இடஒதுக்கீடு: மத்திய அரசு மீது ராகுல் காந்தி குற்றச்சாட்டு

**புது டெல்லி, செப். 23-**

மகளிருக்கான இடஒதுக்கீடு மசோதா என்பது சாதி வாரி கணக்கெடுப்பு கோரிக்கையிலிருந்து திசை திருப்பும் நடவடிக்கை என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி கூறியுள்ளார்.

டெல்லியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:- மகளிருக்கான இடஒதுக்கீடு என்பது நல்ல விஷயம். ஆனால் இது செயல்படுத்தப்படுமா என்பது யாருக்கும் தெரியாது. மகளிர் இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த பத்து ஆண்டுகள் ஆகலாம். நடைமுறைக்கு வராமலும் போகலாம். இது சாதி வாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு கோரிக்கையில் இருந்து திசை திருப்பும் நடவடிக்கை.

உண்மை என்னவென்றால், மகளிர் இட ஒதுக்கீட்டை உடனே நடைமுறைப்படுத்த முடியும். அது சிக்கலான விஷயம் இல்லை. ஆனால் அரசு அதை விரும்பவில்லை. நாடு தழுவிய அளவில் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவில் ஓ.பி.சி. இட ஒதுக்கீடு கட்டாயம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# இளநிலை உதவியாளர் பணிக்கு வரும் 25, 26 தேதிகளில் கலந்தாய்வு

**சென்னை, செப். 23-**

குரூப்-4 ல் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு வரும் 25 மற்றும் 26 ஆகிய இரு தேதிகளில் கலந்தாய்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது,

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 673 இளநிலை உதவியாளர் பட்டியல், பார்வையில் காணும் கடிதத்தின் வாயிலாகப் பெறப்பட்டுள்ளது. பணியாளர்களுக்குக் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கலந்தாய்வு நடைபெற உள்ளதால், பணிநாடுநர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள நாளில் கலந்தாய்வில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்துடன் பணியாளர்களின் பெயர் விவரப் பட்டியல் இணைத்து அனுப்பப்படுகிறது.

நியமன அலுவலர்களான முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் நிருவாக வரம்புக்குட்பட்ட பணிநாடுநரின் விவரங்களைக் கண்டறிந்து பட்டியல் தயார் செய்து, அப்பணியாளர்களுக்குக் கலந்தாய்வு நடைபெற உள்ள விவரங்களைக் குறிப்பிட்டு அழைப்பாணை அனுப்பப்பட வேண்டும்.

தங்கள் ஆளுகைக்குட்பட்ட பணியாளர்கள் அனைவருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டதை சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களால் உறுதி செய்யப்பட வேண்டும். மேலும் 27-ம் தேதியன்று பணியாளர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட உள்ளதால் அந்நாள் வரை பணிநாடுநர்கள் தங்கள் சொந்த செலவில் தங்கும் வசதி மற்றும் இதர வசதி ஏற்பாடு செய்து கொள்ளவும் முதன்மைக் கல்வி அலுவலர்களால் அறிவுறுத்தப்பட வேண்டும்.

மேற்காணும் விவரங்களை அனைத்து பணியாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டதையும் மற்றும் எந்த ஒரு பணியாளர்களும் விடுபடவில்லை என்பதையும் உறுதி செய்யுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உங்கள் மீது ஏன் அவமதிப்பு வழக்கு தொடரக் கூடாது?
### நடிகர் விஷாலுக்கு ஐகோர்ட் கேள்வி?

**சென்னை, செப். 23-**

உங்கள் மீது ஏன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரக் கூடாது என்று நடிகர் விஷாலை சென்னை ஐகோர்ட் நீதிபதி கண்டித்தார்.

நடிகர் விஷால், தனது விஷால் பிலிம் பேக்டரி நிறுவனத்துக்காக சினிமா பைனான்சியர் அன்புச்செழியனின் கோபுரம் பிலிம்ஸ் நிறுவனத்திடம் பெற்ற ரூ. 21 கோடியே 29 லட்சம் கடனை லைகா நிறுவனம் ஏற்றுக் கொண்டு செலுத்தியது.

அந்தத் தொகை முழுவதும் திருப்பி செலுத்தும் வரை, விஷால் பட நிறுவனத்தின் அனைத்து படங்களின் உரிமைகளும் லைகா நிறுவனத்துக்கு வழங்க வேண்டுமென்ற ஒப்பந்தத்தை மீறி, வீரமே வாகை சூடும் என்ற படத்தை வெளியிட்டதற்காக விஷால் நிறுவனத்துக்கு எதிராக, லைகா நிறுவனம் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது.

வழக்கை விசாரித்த தனி நீதிபதி, ரூ.15 கோடியை டெபாசிட் செய்ய விஷால் தரப்புக்கு உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவை உறுதி செய்த இரு நீதிபதிகள் அமர்வு, தொகையை செலுத்தாவிட்டால், தனி நீதிபதி முன் உள்ள வழக்கில் தீர்ப்பு வரும் வரை விஷால் தயாரிக்கும் படங்களை திரையரங்கங்கள் அல்லது ஓடிடி தளத்தில் வெளியிடக்கூடாது என தடைவிதித்து உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்த போது, நடிகர் விஷால் நேரில் ஆஜராகியிருந்தார். அப்போது அவரிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பிய நீதிபதி, விஷாலின் நான்கு வங்கிக் கணக்குகளில் கடந்த 2021-ம் ஆண்டு ஜனவரி முதல் இது வரைக்குமான கணக்கு விவரங்களையும், விஷாலுக்கு சொந்தமான அசையும், அசையா சொத்து விவரங்கள், அவை எப்போது வாங்கப்பட்டன என்பதையும் சொத்து ஆவணங்களுடன் தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கில் நேற்று நேரில் ஆஜராஜ விஷால் சொத்து விவரங்களை தாக்கல் செய்யவில்லை. இதற்கான காரணமாக, வங்கியில் இருந்து சொத்து விவரங்களைப் பெற தாமதமாகி விட்டது. இதனை தாக்கல் செய்ய 6 நாள்கள் அவகாசம் அளிக்க வேண்டும். மேலும், என் வீடு அடமானத்தில் இருக்கிறது என விஷால் தரப்பிலிருந்து கூறப்பட்டது.

இதைக் கேட்ட நீதிபதி பி.டி.ஆஷா, நீதிமன்றத்தை விட பெரிய ஆள் என விஷால் எண்ண வேண்டாம். நீதிமன்றம் முன் அனைவரும் சமம்.

உங்கள் மீது ஏன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரக் கூடாது? எனக் கண்டிப்புடன் கூறிய பின், சொத்து விவரங்களை தாக்கல் செய்ய அவகாசம் அளித்து விஷால் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கும் அளித்தார்.

**மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி**

## தமிழகத்தில் 28-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

**சென்னை, செப். 23-**

தமிழகத்தில் 28-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தென் தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, இன்று 23-ம் தேதி தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்புத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

நாளை 24-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 27-ம் தேதி தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 28-ம் தேதி தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான/மிதமான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற தேர்தலில் மீண்டும் கோவையில் போட்டியிடுகிறேன்: கமலஹாசன் அறிவிப்பு

**கோவை, செப். 23-**

பாராளுமன்ற மக்களவைத் தேர்தலில் மீண்டும் கோவையில் போட்டியிடுகிறேன் என்று கமல்ஹாசன் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் பணிகள் தொடர்பாக மக்கள் நீதி மய்யம் கட்சியின் கோவை மண்டல நிர்வாகிகளுடன் அக்கட்சித் தலைவர் கமல்ஹாசன் ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் பேசியதாவது,

மக்களவைத் தேர்தலில் கோவை தொகுதியில் இருந்து போட்டியிடுகிறேன். கோவையில் எனக்கு பெரும் ஆதரவு இருப்பதால் மீண்டும் இங்கு போட்டியிட உள்ளேன். கட்சி நிர்வாகிகள் தேர்தலுக்கு தயாராக இருக்க வேண்டும். விக்ரம் படத்திற்கு கூட்டம் சேர்கிறது. மக்கள் நீதி மய்யத்திற்கு கூட்டம் சேராதா?.

சனாதனம் என்ற ஒரு வார்த்தை சொன்னதற்காக இவ்வளவு பெரிய பிரச்சினையை உருவாக்குகிறார்கள். எங்களுக்கு அந்த வார்த்தையை சொன்னவர் பெரியார். தி.மு.க.வோ, வேறு எந்த கட்சியோ பெரியாரை சொந்தம் கொண்டாட முடியாது.

பெரியாரை தமிழ்நாடே சொந்தம் கொண்டாடும். இந்தி ஒழிக என கூறவில்லை, தமிழ் வாழ்க என கூறுகிறோம்.

இந்தி பேசினால்தான் வேலை என்றால் அந்த வேலை எங்களுக்கு வேண்டாம். அன்பு ஒன்றுதான் எனக்கு தெரிந்த மதம். இவ்வாறு அவர் பேசினார்.

# அக். 16- முதல் சேலத்தில் இருந்து மீண்டும் விமான சேவை தொடக்கம்

**சேலம், செப். 23-**

அக்டோபர் 16-ம் தேதி முதல் சேலத்தில் இருந்து மீண்டும் விமான சேவை தொடங்கவுள்ளதால் சேலம் மற்றும் அண்டை மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலதிபர்கள் அரசியல் பிரமுகர்கள், முக்கிய நபர்கள் வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

சேலத்திலிருந்து சென்னைக்கு மத்திய அரசின் உதய் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு விமான சேவை தொடங்கப்பட்டது. ஆனால் பொதுமக்களிடம் போதுமான வரவேற்பு இல்லாததால் தற்போது அந்த விமான சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அந்த விமான சேவையை மீண்டும் தொடங்க வேண்டுமென தொழிலதிபர்கள், அரசியல் பிரமுகர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். மேலும் சேலத்தில் இருந்து வெளியூருக்கும், வெளியூர்களிலிருந்து சேலத்திற்கும் விமானங்கள் இயக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் சேலம் பார்த்திபன் எம்.பி., பல முறை பாராளுமன்றத்தில் கோரிக்கைகளை முன் வைத்தார். அதன் தொடர்ச்சியாக அடுத்த மாதம் 16-ம் தேதி முதல் சேலத்தில் இருந்து மீண்டும் விமானம் இயக்கப்படுகிறது. சேலம் காமலாபுரம் விமான நிலையத்திற்கு பெங்களூரில் இருந்தும், சேலத்தில் இருந்து கொச்சிக்கும் விமான சேவையை ஏர் லைன்ஸ் நிறுவனம் தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

மேலும், சேலத்தில் இருந்து சென்னை வழியாக ஐதராபாத்திற்கு அக்டோபர் மாத இறுதியில் இண்டிகோ நிறுவனம் விமான சேவை தொடங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சேலம் மற்றும் அண்டை மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலதிபர்கள் அரசியல் பிரமுகர்கள், முக்கிய நபர்கள் வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.



தேனி மாவட்டம் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம் சின்ன ஒவுலாபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவ கல்லூரி ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடைபெற்ற மலை மாடுகள் கண்காட்சியினை கலெக்டர் ஷஜீவனா துவக்கி வைத்து பார்வையிட்டார்.

## மதுரை கிழக்கு கோட்ட மின்வாரிய ஊழியர்களுக்கு பணியின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கூட்டம் மேலூரில் நடைபெற்றது



மேலூர் செப் 23

மதுரை மின்சார கிழக்கு கோட்டத்தின் சார்பாக மின் சார வாரிய ஊழியர்களுக்கு பணியின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கூட்டம் மேலூர் சந்தப்பேட்டை தனி யார் மண்டபத்தில் நடை பெற் றது.கூட் டத் திற்கு மதுரை வட்ட மேற்பார்வை பொறியாளர் எஸ். மங்களநா தன் மின் வாரியஊழியர்கள் வேலை செய்யும் போது விபத்தின்றி பணியில் ஈடுப டுமாறும், பாதுகாப்புடன் பணியில் ஈடுபடுமாறு மின் வாரிய ஊழியர்களிடம் எடுத் துரைத்தார். நிகழ்ச்சியில் மதுரை கிழக்கு செயற்பொறி யாளர் ராஜா காந்தி, மதுரை செயற்பொறியாளர் (பொது) சோஃபியா, மதுரை உதவி செயற்பொறியாளர் (பொது) தேவி சித்ரா, உதவி செயற் பொறியாளர்கள், உதவி மின் பொறியாளர்கள், மற்றும் மதுரை கிழக்கு கோட்டத் தின் களப்பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண் டனர்.

## அம்பிளிக்கை ஜேக்கப் கிறிஸ்துவ கல்லூரியில் வேலைவாய்ப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி



ஒட்டன்சத்திரம்.செப் .23.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே யுள்ள அம்பிளிக்கை ஜேக்கப் கிறிஸ்துவக் கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பினை பெற வேண் டும் என்ற நோக்கத்தில் வேலை வாய்ப்பு மேம்பாட் டுத்திறன் பயிற்சிகள் நடத் தப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக வாழ்க்கைத்திறன் பயிற்சி மையத்தின் பயிற்சியாளர் சதீஷ்குமார் மாணவர்கள் வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் போது தங்களை எவ்வாறு தயார்ப டுத்திக் கொள்ள வேண்டும் என்பதை பற்றியும் தன்னி டம் இருக்கும் தனித்திறன் களை எவ்வாறு வெளிப்ப டுத்த வேண்டும் என்பது பற் றியும் பயிற்சிகளை அளித் தார்.

இறுதியாக எண் விளை யாட்டுக்கள் மூலம் மாணவர் களின் தனித் திறன்களை அறிந்து பயிற்சி அளித்தார். முடிவில் கல்லூரி முதல்வர் சுந்தர்சிங் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## மலட்டாறு ஆற்றில் உள்ள கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்: ஒன்றிய கவுன்சிலர் கோரிக்கை



கடலாடிசெப்23

மலட்டாறுஆற்றுப்பகுதி யில் உள்ள காட்டுகருவ மரங் களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் யூனியன் கூட்டத்தில் ஒன்றிய கவுன்சி லர் கோரிக்கைவைத்தனர். கடலாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய கவுன்சிலர்களின் கூட்டம் ஒன்றிய பெருந்தலைவர் முத் துலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. ஆணையா ளர் ஜெயஅ10னந்த் -வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜா ஆகியோர் முன்னிலை வகித் தனர். கூட்டத்தில் கவுன்சிலர் கள் பேசியதாவது: முனியசா மிபாண்டியன்: பருவ மழை பெய்ய உள்ள நிலையில் மலட்டாறு ஆற்றுப்பகுதி யில் இருக்கின்ற காட்டுகருவ மரங்களை அகற்ற நடவ டிக்கை எடுக்க வேண்டும். மேலும் கால்வாய்களில் உள்ள கருவ மரங்களை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.ஜெயசந்தி ரன்: தேசிய ஊரக திட்டத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு கடந்த எட்டு வாரங்களாக சம்பள பணம் ஏறவில்லை.த கவலை அரசின் கவனத்திற்கு கொண்டுசெல்ல வேண்டும். இவ்வாறு கவுன்சிலர்கள் கூறி னர். துணைத்தலைவர் ஆத் தி-ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜேந் தி ரன்-மா ய கி ருஷ் ணன்-குமரையா உள்ளிட் டோர் கலந்துகொண்டனர்.

## சாத்தூர் : தலைமை காவலர் தற்கொலை

விருதுநகர் செப்.23.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே சின்னகொல் லபட்டி பகுதயில் ரயில் விழுந்து ஆண் சடலம் கிடப் பதாக அப்பகுதைய சேர்ந்த வர்கள் சாத்தூர் தாலுகா காவல்துறையினருக்கு தக வல் தெரிவித்துள்ளனர்.இதை யடுத்து சாத்தூர் போலீஸார் தூத்துக்குடி ரயில்வே போலீ ஸாருக்கு தகவல் தெரிவித்த னர்.இதையடுத்து தூத்துக்குடி ரயில்வே போலீஸார் சம்பவ இடத்திற்கு வந்து இறந்தவ ரின் உடலை மீட்டு கோவில் பட்டி அரசு மருத்துவம னைக்கு பிரேத பரிசோத னைக்காக அனுப்பிவைத்த னர்.இதுகுறித்து ரயில்வே போலீஸார் நடத்திய விசார ணையில் உயிரிழந்தது ரயில்வே பாதுகாப்பு படை யில் தலைமை காவலராக பணிபுரியம் சொக்கலிங்க



பாண்டியன்(49) இவர் செங் கோட்டையில் பணியாற்றி வருவதும் விசாரணையில் தெரியவந்தது.மேலும் இவ ருக்கும் ஏற்கனவே குடும்ப தகராறு உள்ளதாகவும் இத னால் மனமுடைந்து தற் கொலை செய்து கொண்டாரா என்பது குறித்தும் தூத்துக்குடி ரயில்வ போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நத்தம், செந்துறை, சிறுகுடியில் அறிவிக்கப்படாத மின்சார தடையால் பொதுமக்கள் அவதி

நத்தம், செப், 23

திண்டுக்கல் மாவட்டம் நத்தம், செந்துறை, சிறுகுடி ஆகிய துணை மின் நிலையத்திலிருந்து சிறுகுடி, ஊராளிபட்டி, நத் தம், கோவில்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள 100-க்கும் மேற்பட்ட கிராமங்க ளுக்கு மின் வினியோகம் செய்யப்படு கிறது. இந்நிலையில் கடந்த 3 நாட்களாக காலை, மாலை, இரவு நேரங்களில் அறிவிக்கப்படாமல் திடீர் திடீரென அடிக் கடி மின்தடை ஏற்படுகிறது. இது குறித்து மக்கள் கூறுகையில் குறைந்த அளவு மின்சாரத்தால் வீட்டில் உள்ள மிக்ஸி, குக்கர், பிரிட்ஜ், டிவி உள்பட எலக்ட்ரிக், எலக்ட்ரானிக் பொருட்கள் அடிக்கடி பழுது ஏற்படுகிறது.மேலும் மின்சாரத்தை மட்டும் நம்பி தொழில் நடத்தும் வணிக நிறுவன ங்கள், பின்னலாடை தொழில் செய்யும் நிறுவன ங்கள், மாவு அரைக்கும் இயந்தி ரம் வைத்திருப்பவர்கள் திடீரென மின்சாரம் நிறுத்தப்படுவ தால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் இயந் திரங்களும் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. இதனால் தொழி லாளர்க ளும் குறித்த நேரத்தில் பணிகளை செய்து முடிக்க முடியாத நிலை உள்ளது.மின்தடையால் இரவு நேரங்களில் கொசு தொல்லையால் மக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். மேலும் இரவு நேரங்களில் மின்விசிறி இல்லாத காரணத்தி னால் குழந்தைகளும் வியர்வையில் நனைந்து தூங்க முடியாத அவல நிலை உள்ளது. அலுவலக நேரங்களில் மின்தடையால் பணியாளர்கள் சிரமப்படுகின்றனர். மின்தடைக்கான காரணம் தெரியாமல் புலம்புகின்றனர். எனவே இனிவரும் நாட்களில் மின்தடை ஏற்படாமல் இருக்க மின்வாரிய அதிகாரிகள் நட வடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருமங்கலம் அருகே காட்டாற்று வெள்ளத்தில் சிக்கிய மின்வாரிய பணியாளர் மீட்பு

திருமங்கலம். செப்.23.

மதுரை மாவட்டம் திருமங்கலம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. இதனால் கவுண்டமா நதியின் வரத்துக் கால்வாய்களில் காட் டாற்று வெள்ளம் கரை புரண்டு ஓடியது. அப்போது டி.புதுப் பட்டி கிராமத்தி லிருந்து எஸ்.கோபாலபுரம் செல்லும் சாலை யில் உள்ள தரைப்பாலம் வெள்ளநீரில் மூழ்கியது.இந்நிலை யில் கள்ளிக்குடி அருகேயுள்ள வில்லூரைச் சேர்ந்த மின்வா ரிய பணியாளர் சக்திவேல் தனது டூவீலரில் கோபாலபுரம் நோக்கி சென்றுள்ளார். அப்போது தரைப் பாலத்தின் நடுவே சென்ற போது மழைநீர் பாலத்தின் மேல் அதிகமாகச் சென்ற தால் அவர் டூ வீலருடன் தண்ணீரில் விழுந்து தத்தளித்துள் ளார்.

அதே சமயம் வெள்ளத்தில் மூழ்காமல் இருக்க அருகேயி ருந்த கருவேலமரத்தினை பிடித்தபடி தண்ணிரில் மிதந்துள் ளார். இதனை கண்ட அப்பகுதி மக்கள் திருமங்கலம் தீய ணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். இதனிடையே வெள்ள நீரின் வேகம் அதிகரிக்கவே கிராமமக்கள் மிகவும் சிரமப்பட்டு கயிறு மூலமாக மின்வாரிய பணியாளர் சக்திவே லுவை மீட்டனர். இருப்பினும் அவரது டூவீலர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இதனை தொடர்ந்து சம்பவ இடத் திற்கு வந்த தீயணைப்பு துறையினர் தரைப் பாலத்தின் வழி யாக பொதுமக்கள் யாரும் செல்லவேண்டாம் என எச்சரிக்கை விடுத்து அறிவுறுத்தினர் .இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் இடி மின்னல் தாக்கியதில் வெடிவிபத்து: அறை தரைமட்டம்



விருதுநகர் செப். 23.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே உள்ள வேண்டு ராயபுரத்தில் AP செல்வராஜ் என்பவருக்கு சொந்தமான பட் டாசு ஆலை இயங்கி வருகிறது இன்று வழக்கம் போல் காலையில் தொழிலாளர்கள் பட்டாசு ஆலையில் தீபாவளி நேரம் என்பதால் பட்டாசு தயாரிக்கும் பணியில் மும்மரமாக தொழிலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் போது மாலை வேளையில் திடீரென பலத்த இடி மின்னல் காற்று டன் கூடிய பலத்த மழை பெய்தபோது பட்டாசு தயாரிக்கும் பணியிலிருந்த தொழிலாளர்கள் அனைவரும் வெளியேறிய தும் திடீரென பட்டாசு ஆ லை வளாகத்தில் ராக்கெட் வெடி தயாரிக்கும் அறையில் இடி மின்னல் தாக்கியதில் அந்த அறை யில் வெடிவிபத்து ஏற்பட்டன உடனடியாக சிவகாசி தீய ணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு நிலைய அலுவலர் வெங்கடேசன் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத் திற்கு விரைந்து சென்று தீயை அணைத்தனர். மேலும் பட் டாசு தொழிலாளர்கள் வெளியேறி உள்ளதால் பெரும் உயிர் சேதம் தவிர்ககப்பட்டன. சம்பவ இடத்திற்கு பட்டாசு மற் றும் தீப்பெட்டி தனி தாசில்தார் மற்றும் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவம் குறித்து மல்லி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விபத்து குறித்து விசா ரணை நடத்தி வருகின்றனர்.

## முதுகுளத்தூர் பேரூராட்சியில் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம்



முதுகுளத்தூர். செப்23.

முதுகுளத்தூர் பேரூ ராட்சி அலுவலகத்தில் குழந் தைகள் பாதுகாப்பு விழிப்பு ணர்வு கூட்டம் பேரூராட்சி சேர்மன் ஏ.ஷா[ஹான் தலை மையில் செயல் அலுவலர் செ.மாருதி முன்னிலையில் நடைபெற்றது.

பேரூராட்சி ஊழியர் முனியசாமி அனைவரையும் வரவேற்றார் .

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மகேஸ்வரன் NgRifapy; :குழந் தைகளுக்கு வரும் பிரச்சனை களை எவ்வாறு சமாளிப்பது என விளக்கினார்.

கூட்டத்தில் முதுகுளத் தூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சந்தன வேல்- சப் இன்ஸ்பெக்டர் ராஜன்- சுகாதார ஆய்வாளர் நேதாஜி- ஊட்டசத்து மேற் பார்வையாளர் சண்முகசுந் தரி உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

## கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற 2-வது சிறப்பு மருத்துவ முகாம்

### அமைச்சர் பெரியகருப்பன் துவக்கி வைத்தார்



சிவகங்கை.செப்.23.

சிவகங்கை மாவட்டம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு விழாவினை முன் னிட்டு, தேவகோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவல கத்தில் மாவட்ட மாற்றுத்தி றனாளிகள் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற 2-வது சிறப்பு மருத்துவ முகாமில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மாற்றுத்திற னாளிகளுக்கு உதவி உபர ணங்களை, மாவட்ட ஆட் சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில் வழங்கி தெரி விக்கையில்,அதன் அடிப்ப டையில் சிவகங்கை மாவட் டத்தில் இரண்டாவது சிறப்பு மருத்துவ முகாமாக தேவ கோட்டை பகுதியில் மாவட்ட அளவில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் மாற்றுத்திறனாளி களுக்கென தனித்துறையை ஏற்படுத்தி, அத்துறையை தன்வசம் வைத்துக் கொண்டு அவர்களை நலம் பெறச் செய்தார்கள். அவ்வழியில் தமிழகத்தில் சிறப்பான ஆட் சியினை நடத்திக்கொண்டு இருக்கும் மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாமும் என்ற தத்துவத்தின் அடிப்ப டையில் திட்டங்களை தமிழ கத்தில் செயல்படுத்தி, பொதுமக்களுக்கு நலத்திட் டங்களை வழங்கி வருவது மட்டுமன்றி, மாற்றுத்திறனா ளிகளின் மீது மிகுந்த அக் கறை கொண்டு அவர்களுக் கும் பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்ப டுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், மாற்றுத் திறனாளிகளுக்கு பயனுள்ள வகையில் மாவட்ட அள வில் நடைபெற்றுக் கொண் டிருக்கும் இந்த சிறப்பு மருத் துவ முகாமில் மாற்றுத்திற னாளிகள் அனைவரும் பயன் பெற்று, தான் பயன்பெறுவ தோடு மட்டுமல்லாமல் தங் களை சான்றோர்களுக்கும் இம்முகாம் குறித்து எடுத்து ரைத்து அவர்களையும் நலம் பெறச் செய்ய வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே ஆர்.பெரியகருப்பன் அவர் கள் தெரிவித்தார்.இந்நிகழ்ச் சியில், மாவட்ட மாற்றுத்திற னாளிகள் நல அலுவலர் உல கநாதன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் செந்தில்குமார் மற்றும் பயனாளிகள் உட் பட பலர் கலந்து கொண்ட னர்.

## திருமங்கலம் பி.கே.என் கல்லூரியில் பல்கலைக்கழக டி பிரிவு மண்டல கைபந்து போட்டி



திருமங்கலம்.செப்.23.

மதுரை மாவட்டம் திரு மங்கலம் பி.கே.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரி யில் மதுரை காமராஜர் பல்க லைக் கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு

இடையிலான டி பிரிவு மண்டல கைபந்து போட்டி வெகு சிறப்பாக நடைபெற் றது.

இந்த போட்டிகளை பி.கே.என் கல்லூரி தலைவர் பி.ராஜேந்திர பிரசாத்,செயலர் எம்.செல்வராஜ்,பொருளாளர் கே.ஜெ ய சீ லன், கல் லூரி முதல்வர் ஆர்.கணேசன் ஆகி யோர் துவக்கி வைத்தனர். பி.கே.என் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியில் 8-க் கும் மேற்பட்ட கல்லூரிக ளைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது திறமை களை வெளிப்படுத்தினர்.

இதையடுத்து போட்டி யில் வெற்றிபெற்று முதலி டம் பிடித்த சிவகாசி அய்ய நாடார் கல்லூரி அணி சிறப் பாக விளையாடி முதலிடம் பிடித்து கோப்பையை தட் டிச் சென்றது.இதனை தொடர்ந்து விருதுநகர் செந் திக்குமார நாடார் கல்லூரி இரண்டாமிடம் பிடித்தது. வெற்றி பெற்று முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பிடித்த கல்லூரி கைபந்து அணிகளுக்கு பி.கே.என் கல் லூரி நிர்வாக கமிட்டியினர் பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்தனர்.

நிகழ்வின் நிறைவில் மதுரை காமராஜர் பல்கலைக் கழக டி மண்டல கன்வீனர் டாக்டர்.ஹரி அனைவருக் கும் நன்றி தெரிவித்தார்.

## கொடைக்கானலில் பேட்மிட்டன் போட்டிகள்




கொடைக்கானல் செப்.23.

கொடைக்கானலில் க டந்த இரண்டு நாட்களாக பேட்மிட்டன் போட்டிகள் நடந்தது 50க்கும் மேற்பட்ட வீரர்கள் இந்த போட்டியில் கலந்து கொண்டு விளையாடி னார்கள் கொடைக்கானல் ரோட்டரி சங்கம் சார்பில் கொடைக்கானல் சர்வதேச பள்ளி வளாகத்தில் நடந்த இந்த பேட்மிட்டன் போட்டி யினை ரோட்டரி சங்க முன் னாள் கவர்னர் சாம் பாபு தொடங்கி வைத்தார். இ ரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த போட்டிகளில் இறுதிப் போட்டியில் அப்பாஸ், யாகூப் ஜோடி முதல் இடத் தைப் பெற்று ஜே சி செல்லத் துரை சுழற் கோப்பையை வென்றனர். ராஜ்குமார், ஜஸ் வந்த் ஜோடி இரண்டாம் இடம் பெற்றனர். பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவிற்கு ரோட்டரி சங்கத் தலைவர் டாக்டர் மதன் தலைமை தாங் கினார். செயலாளர் அக்பர் சேட், ஸ்போர்ட்ஸ் செயலா ளர் சன்னி ஜேக்கப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வெற்றி பெற்றவர்களுக்கு டாக்டர் மதன் பரிசு கோப் பைகளை வழங்கினார். விழா வில், ரோட்டரி சங்க முன் னாள் தலைவர்கள் கிருபா, செல்வகுமார், ஜெயபிரசாத், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## நத்தம் அருகே கழிவறையில் புகுந்த நல்லபாம்பு

நத்தம், செப், 23

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே ஒடுகம்பட்டியை சேர்ந்தவர் விக்னேஷ் (30). இவரது வீட்டு கழிவறையில் நல் லபாம்பு ஒன்று ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. இதை பார்த்த அவர் நத்தம் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.அதன்பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் தீயணைப்பு நிலைய அலுவலர் லெட்சுமணன் உள்ளிட்ட வீரர்கள் வீட்டு கழிவறையில் இருந்த நல்லபாம்பை லாவக மாக கருவி மூலம் பிடித்தனர். தொடர்ந்து பாம்பு வனத்துறை யினரிடம் ஒப்படைக்கப்பட்டு வனப்பகுதியில் விடப்பட்டது.

### திருவண்ணாமலை கலெக்டர் அலுவலக கூட்டரங்கில்

# வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம்

## கலெக்டர் பா.முருகேஷ் தலைமையில் நடந்தது



**திருவண்ணாமலை, செப் 23-**

திரு வண் ணா மலை கலெக்டர் அலுவலக கூட்ட ரங்கில் வேளாண்மை மற் றும் உழவர் நலத்துறையின் சார்பில் விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்தாவது .

வேளாண்மை மற்றும் பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்கு பல வேறு திட்டங்களின் கீழ் 50ஓ மானியத்துடன் கடனு தவிகளை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. தற்போது தமிழ்நாடு அரசு பயிர் காப் பீட்டு திட்டத்தின் கீழ் 37 மாவட்டங்களில் வறட்சி வெள்ளம் பருவம் தவறிய மழை போன்ற பல்வேறு இயற்கை இடர்பாடுகளால் சுமார் 7 இலட்சம் ஏக்கர் பரப் பளவிலான மகசூல் இழப் புக்காக இழப்பீட்டுத் தொகை ரூ. 560 கோடி ஒதுக் கீடு செய்து ஆணை வெளியி டப்பட்டுள்ளது. நமது திரு வண்ணாமலை மாவட்டத் தில் வரும் அக்டோபர் மாதம் விவசாயிகள் மாநாடு நடத்த திட்டமிடப்பட்டுள் ளது. மேலும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மற்றும் கால்நடை கல்லூரி அமைக்க வேண்டும் என்று விவசாயி கள் கோரிக்கை விடுத்தனர். தற்போது அதற்கு இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. நமது மாவட்டத்தில் நிலத் தடி நீர் மட்டத்தை உயர்த் தும் வகையில் 1333 செயல்ப டாத ஆழ் துளை கிணறு களை கண்டறிந்து மழைநீர் சேகரிக்கும் தொட்டியாக மாற்றப்பட்டுள்ளது. விவ சாய பெருங்குடி மக்கள் தங் கள் நிலத்தில் மானியத்து டன் கடனுதவி பெற்று சிறு குட்டைகள் தடுப்பணைகள் பண்ணை குட்டைகள் அமைத்திட வேண்டும். இவ் வாறு செய்வதன் மூலம் தரிசு நிலத்தை விளைநிலமாக மாற்றி விவசாயிகள் தங்க ளின் வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் . மேலும் வேளாண்மை மற் றும் உழவர் நலத்துறையின் மூலம் ஆங்காங்கே பண்ணை குட்டைகள் தடுப் பணைகள் அமைப்பதில் முனைப்புடன் செயல்பட வேண்டும். அதேபோல் திரு வண்ணாமலை மாவட்டத் தில் விவசாயிகள் இ-அடங் கல் செய்ய தேவையான சான்றுகளை கிராம நிர்வாக அலுவலர்கள் உடனடியாக வழங்க வேண்டும். ஏரி குளங்கள் மற்றும் கால்வாய் ஆக்கிரமிப்புகளை உடனடி யாக கண்டறிந்து அகற்ற நட வடிக்கை எடுக்க வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட் டத்தின் கீழ் செயல்படுத்தப் படும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். மேலும் கலசபாக்கம் வட்டம் ஆனை வாடி மேம்பாலம் பராம ரிப்பு பணிகளை மழைக்கா லம் துவங்கும் முன் விரைந்து முடிக்க வேண்டும். பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் பதிவு செய் துள்ள விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகை உடனடி யாக வழங்க வேண்டும். தோட்டக்கலைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு பரு வத்திற்கு ஏற்ப தரமான பழச் செடிகள் மற்றும் காய்கறி விதைகளை தகுதியான விவ சாயிகளுக்கு உடனடியாக வழங்க வேண்டும். வேளாண்மை பொறியியல் துறை மூலம் புல்வெட்டும் கருவிகள் பெறுவதற்கு விண் ணப்பித்துள்ள விவசாயிக ளுக்கு உடனடியாக வேளாண் உபகரணங்கள் வழங்கும் வேண்டும். கலைஞ ரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டிற்கு 175 கிராமங்களில் செயல்படுத் தப்பட்டு வரும் சூரியசக்தி பம்பு செட்டுகள்அமைத்தல் நுண்ணுயிர் பாசன முறையை பின்பற்றுதல் உள் ளிட்ட பல்வேறு பணிகளை விரைந்து முடிக்கப்பட வேண்டும் கூட்டுறவு சங்கங் களின் மூலம் அதிக அளவு பயிர் கடன் வழங்க வேண் டும்.

கால்வாய் பாசன நீர் கால் வாய் வழித்தடங்கள் தூர்வா ரப்படவேண்டும் மேலும் வேளாண்மை மற்றும் உழ வர் நலத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளை முனைப்புடன் செயல்பட்டு விரைந்து முடிக்க வேண்டும் என்று கலெக்டர் தெரிவித் தார்.

முன்னதாக வேளா ண்மை மற்றும் உழவர் நலத் துறையின் சார்பில் விவசாயி களுக்கான நலத்திட்டங்கள் கையேட்டினை கலெக்டர் வெளியிட்டு விவசாயிக ளுக்கு கையேடுகளை வழங் கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி வேளா ண்மை இணை இயக்குநர் சி.ஹரகுமார் மாவட்ட ஆட் சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) முனை வர்.க.உமாபதி கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதி வாளர் நடராஜன் மண்டல இணை இயக்குநர் கால்ந டைத்துறை சோமசுந்தரம் தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் வெங்க டேசன் முன்னோடி வங்கி மேலாளர் கௌரி மற்றும் பல்துறை தலைவர்கள் அலு வலர்கள் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் மற்றும் விவ சாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

### பலத்த போலீஸ் பாதுகாப்புடன்

# ஆரணியில் விநாயகர் சிலைகள் விஜர்சனம் செய்யப்பட்டன



**ஆரணி செப் 23:**


ஆரணியில் விநாயகர் சிலைகள் விஜர்சனம் செய்ய எடுத்து செல்ல பலத்த போலீஸ் பாதுகாப்புடன் ஊர்வலம்.

ஆரணி டவுன் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் 99 இடங் களில் விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற்றது இந்து முன்னணி சார்பில் சுமார் 50 இடங் களில் சிலைகள் வைத்து வழிபட்டனர். ஆரணி நகரத்தில் 20 இடங்களில் இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலைகள் விஜர்சனம் செய்ய ஊர்வலமாக எடுத்து சென்றனர். இந்து முன்னணி மாவட்ட செயலாளர் தாமோதரன் தலைமையில் கோட்டத்தலைவர் மகேஷ், நெல் அரிசி வியாபாரிகள் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் பி.ந டராஜன் ஆகியோர் விநாயகர் சிலைகள் ஊர்வலத்தை துவக்கி வைத்தனர். ஊர்வலத்தின் முன்னால் சிலம்பாட்டம், வீரதீர செயல்கள், குதிரை வீரர்கள், குதிரை வாகனத்தில் தேவதை விநாயகர் சிலை எடுத்து செல்லுதல், விநாயகர், முருகன், சிவன் பார்வதி உள்ளிட்ட சுவாமிகள் வேடமனிந்து, கேரளா சென்டை மேளம், உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகளு டன் ஊர்வலம் சென்றது ஆரணி அண்ணா சிலை அருகில் துவங்கப்பட்டு மார்க்கெட் ரோடு, பழைய பேருந்து நிலை யம், வடக்கு மாட வீதி, ஷராப் பஜார், எஸ் எம் ரோடு, காஜி வாடை, ராமகிருஷ்ணா பேட்டை வழியாக, பையூரில் உள்ள பாறை குளத்தில் விநாயகர் சிலைகள் கரைத்தனர். ஊர்வலத் தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. சிலை கரைக்கும் இடத்தில் தீயணைப்பு துறை, மருத்துவத் துறையி னர் இருந்தனர். ஊர்வலத்தில் வியாபாரிகள் சங்கம் சார்பில் ராஜன், மற்றும் இந்து முன்னணி நிர்வாகிகள் பாஜக நிர்வாகி கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



**ராணிப்பேட்டை மாவட்டம் மேல்விஷாரம் நகராட்சிக்கு டி. கே.பாபு சாஹிப் தெருவில் கே.என்.எம்.டி .திட்டத்தின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியை நகர மன்ற தலைவர் தொடங்கி வைத்தார்.**

# மேல்செங்கம் காமாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்



**செங்கம் செப் 23**

செங்கம் ஒன்றியம் மேல்செங்கம் ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. வேத விற்பண் ணர்கள் வேத மந்திரம் ஓதி சிறப்பு யாகம் கலச பூஜை செய்து கலச நீர் தெளித்து கும்பாபிஷேகத்தை நடத்தினர். தொடர்ந்து சிறப்பு அபிஷேகம் அலங்காரம் தீபாராதணை திருவீதி உலா அன்னதானம் ஆகிய நிகழ்ச்சியில் நடந்தது. காந்தபாளையம் சிவராஜ் சுவாமிகள் குழுவினரால் வேத பாராயணம் திரு முறை பாராயணம் நடைபெற்றது. விழாவில் ஏராளமான பக் தர்கள் கலந்துக்கொண்டனர்.

# காரப்பட்டு கிராமத்தில் அரசமரத்து விநாயகர் சிலை கரைப்பு



**செங்கம் செப். 23-**

செங்கம் தாலுக்கா புதுப்பாளையம் ஒன்றியம் காரப்பட்டு கிராமத்தில் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு அரசமரத்து விநா யகர் அமைக்கப்பட்டு சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. மூன் றாம் நாள் சிறப்பு பூஜை நடத்தி சிறப்பு அலங்காரம் செய்யப் பட்டு மேள தாளத்துடன் வான வேடிக்கையுடன் ஊர்வலம் நடத்தி விநாயகர் சிலை ஆற்றில் கரைக்கப்பட்டது. ஊராட்சி மன்ற தலைவர் ஜெயந்தி லட்சுமணன் ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். ஏராளமான பக்தர்கள் இளைஞர்கள் விழா குழுவி னர் கலந்துக்கொண்டனர்.

# மருந்தகம் பயிற்சி கல்லூரி மாணவர்களுக்கு இலக்கியங்களில் சிறுதானியங்கள் குறித்து கலெக்டர் பேச்சு



**திருப்பத்தூர், செப் 23-**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை மண்டல்வாடி பகுதியில் செயல்பட்டு வரும் ஜிபி பார்மசி கல்லூரியில் உலக இலக்கியங்களில் சிறுதானியங்கள் குறித்து ஏலகிரி பாரதி தமிழ் சங்கம் ஜிபி. பார்மசி கல்லூரி. மற்றும் பாலாறு வேளாண்மை கல்லூரி இணைந்து நடத்தும் பன்னாட்டு கருத் தரங்க நிகழ்ச்சி நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில் கலெக்டர் பங்கேற்று மருந்தக கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி யின் முக்கியத்துவம் குறித்தும் சிறுதானியங்கள் குறித்தும் பேசினார்.அங்கு தயாரித்து வைக்கப்பட்டுள்ள சிறுதானிய உணவு மாதிரிகளை பார்வையிட்டு ருசித்து பார்த்தார்.

பின்னர் கல்லூரி மாணவர்களுக்கு படிப்பின் முக்கியத்து வம் குறித்தும் சிறுதானிய வகைகளை குறித்தும் பேசினார். இந்த நிகழ்ச்சியில் பொன்னுசாமி தாளாளர் ஜிபி பார்மசி கல் லூரி மற்றும் ஏலகிரி பாரதி தமிழ் சங்கம் சிவராஜி தமிழ் செம் மல் முனைவர் ரத்தின நடராஜன் மற்றும் அரசு பொது மருத் துவமனை மருத்துவர் பிரபாகரன் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

### நெடுங்குணம் அரசு மேல்நிலைப்பள்ளியில்

# இடைநின்ற மாற்றுத்திறன் மாணவனுக்கு பாடபுத்தகங்கள்

## வட்டார கல்வி அலுவலர் வழங்கினார்

**திருவண்ணாமலை செப்.23-**

திருவண்ணாமலை மாவட்டம் நெடுங்குணம் மேல்நிலைப் பள்ளியில் இடைநின்ற மாற்றுத்திறன் மாணவனை வட்டார கல்வி அலுவலர் கோ.குணசேகரன் அழைத்து வந்து பள்ளியில் சேர்த்த அவர் மாணவனுக்கு பாடபுத்தகங்களை வழங்கினார்.

தமிழக அரசு பள்ளி மாணவர்கள் கல்வி கற்பதில் எவ்வித தடங்களும் ஏற்படக் கூடாது என்பதில் தீவிரமாக உள்ளது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரும் துரித நடவடிக்கை எடுத்து வருகிறார். இந்நிலையில், சேத்துப்பட்டு வட்டம் பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட ரகுநாதசமுத்திரம் விவசாய தொழிலாளர்களான முருகன்-மஞ்சுளா தம்பதியின் மகன் வடிவேலு என்பவர் மாற்றுத்திறனாளி. இவர் மேலத்தாங்கல் அரசு உயர்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றார்.

பிளஸ் 1 படிக்க அருகாமையில் பள்ளிக்கூடம் இல்லாததால் கடந்த ஓராண்டாக வீட்டிலேயே இருந்துள்ளார். இதுகுறித்து தகவல் அறிந்த நெடுங்குணம் மாற்றுத்திறனாளிகள் நல பள்ளி அமைப்பாளர் உஷா, சிறப்பு ஆசிரியை ஜெயம்மேரி ஆகியோர் பெரணமல்லூர் வட்டார கல்வி அலுவலர் கோ.குணசேகரனுக்கு தகவல் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து மாற்றுத்திறனாளி வடிவேலு வீட்டுக்கு வட்டார கல்வி அலுவலர் கோ.குணசேகரன் சென்று அவரது பெற்றோர்களிடம் பேசி வடி வேலுவை அழைத்து வந்து நெடுங்குணம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்1 படிக்க வகுப்பில் சேர்த்தார்.

மாணவனுக்கு வேண்டிய பாடபுத்தகங்கள் சீருடை அனைத்தும் வழங்கப்பட்டது.

மேலும், மாணவன் வடிவேலு ரகுநாதசமுத்திரம் கிராமத்தில் இருந்து வந்து செல்ல, சுவாடு தொண்டு நெடுங்குணம் நிறுவனம் மூலம் தனியாக ஆட்டோ ஒன்றும் ஏற்பாடு செய்து கொடுத்தார். இதற்கு மாற்றுத்திறனாளி மாணவன் வடிவேலுவின் பெற்றோர்கள் நன்றி தெரிவித்தனர்.

மாணவர் சேர்க்கையின்போது அரசு நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் காளிமுத்து, மோசஸ், தொண்டு நிறுவன நிர்வாகிகள் யுவராஜ், லட்சுமணன், இயன்முறை டாக்டர் அரசு ஆகியோர் உடனிருந்தனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# கணதம்பூண்டி,அத்தியந்தல்,ஆணாய்பிறந்தான் ஊராட்சிகளில் 5 ஆயிரம் பேருக்கு சமையல் குக்கர்: எ.வ.வே.கம்பன் வழங்கினார்



**திருவண்ணாமலை, செப்.23-**

திருவண்ணாமலை தொகு திக்குட்பட்ட கணதம்பூண்டி உள்ளிட்ட 3 ஊராட்சிகளில் திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 5 ஆயி ரம் பேருக்கு குக்கர் உள் ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாநில மருத்துவ ரணி துணை தலைவர் எ.வ.வே.கம்பன் வழங்கினார்.

தி ரு வண் ணா மலை ஊராட்சி ஒன்றியத்துக்குட் பட்ட கணதம்பூண்டி, அத்தி யந்தல், ஆணாய்பிறந்தான் உள்ளிட்ட 3 ஊராட்சிகளில் திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா 115வது பிறந்தநாள் விழாவையொட்டியும் முத்த மிழறிஞர் கலைஞர் நூற் றாண்டு விழாவை முன்னிட் டும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடை பெற்றது.

இந்த விழாவுக்கு திரு வண்ணாமலை மத்திய ஒன் றிய செயலாளர் மெய்யூர் ந.சந் திரன் தலைமை தாங்கினார் தலைமை செயற்குழு உறுப்பி னர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங் கன் ஆகியோர் முன்னிலை வகிக்க திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியகுழு தலை வர் கலைவாணி கலைமணி அனைவரையும் வரவேற்றார்.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநில மருத்துவ ரணி துணை தலைவர் எ.வ.வே.கம்பன் 5 ஆயிரம் மகளிருக்கு சமையல் குக்கர் உள்ளிட்ட நலத்திட்ட உதவி களை வழங்கி விழா பேரு ரையாற்றுகையில்

தாயுள்ளம் கொண்ட முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பெண்களுக் கான ஆட்சியாக நடைபெற் றுவருகிறது. திமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம் பெண் களுக்கான நலத்திட்டங் களை செயல்படுத்தப்படுகி றது. பெண்களுக்காக எண் ணற்ற திட்டங்கள் இந்த ஆட் சியில் செயல்படுத்தப்படுகி றது.

வாழ்க்கை தரம் உயர வேண்டும் என்பதற்காக தாயுள்ளத்தோடு குடும்ப பெண்களுக்கு உடன் பிறவா சகோதரனாய் தாயாய் தகப்ப னாய் இருந்து மாதம் ரூ.1000 உரிமைத்தொகையை வீடுவீ டாக முதலமைச்சர் மு.க.ஸ் டாலின் கொடுத்துள்ளார். கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை முதல்வர் மு.க.ஸ் டாலின் நிறைவேற்றியதற் காக தேர்தல் நேரத்தில் அன்பு செலுத்திய மகளிர் தங்களது வீடுகளில் கோலம்போட்டு வாழ்த்து தெரிவித்து நன்றி யும் தெரிவித்துள்ளனர். பெண்களுக்கான இந்த ஆட்சி நடக்கிறது. எனவே இந்த ஆட்சிக்கு நீங்கள் என் றைக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

விழாவில் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் இல.சரவணன் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் சுபாசெல்வ மணி மண்டி ஏழுமலை ஒன் றிய பொருளாளர் ஏழுமலை கணதம்பூண்டி ஊராட்சி மன்ற தலைவர் ஏ.கணேசன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எம்.மனோகரன் இளைஞரணி எம்.தனசேகர் ஆணாய்பிறந்தான் கிளைக் கழக செயலாளர் பி.பரத் ஒன் றிய மாணவரணி துணை தலைவர் ஸ்ரீகாந்த் உள்பட மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் கிளைக் கழக நிர் வாகிகள் உள்ளாட்சி பிரதிநி திகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஆரணி நகராட்சியில்

# தூய்மை பணியாளர்களுக்கு 13 புதிய பேட்டரி வாகனங்கள்

**ஆரணி, செப் 23**

ஆரணி நகராட்சியில் 33 வார்டுகள் உள்ளது. இந்த வார்டுகளில் உள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 2023 ம் ஆண்டிற்கான தூய்மை பாரத இயக்கம் சார்பில் ரூ.26 லட்சம் மதிப்பிலான 13 பேட்டரி வாகனங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதில்நகராட்சி ஆணையாளர் கே.பி.குமரன் தலைமை தாங்கினார். நகரமன்ற தலைவர் ஏ.சி.மணி துவக்கி வைத்து சாவிகளை ஆணையாளரிடம் ஒப்படைத்தார்.தொடர்ந்து, நகராட்சி வார்டுகளுக்கு வீடுவீடாக சென்று மக்கும், மக்காக குப்பைகளை தரம்பிரித்து சேகரிக்க பச்சை மற்றும் நிலநிற தொட்டிகளுடன் பேட்டரி வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து பேசினார். உடன் பொறியாளர் உமாமகேஷ்வரி, சுகாதார அலுவலர் மோகனசுந்தரம், சுகாதார ஆய்வாளர் வடிவேல், சுகாதாரபிரிவு எழுத்தர் பிச்சாண்டி, நகரமன்ற உறுப்பினர்கள் பழனி, ரம்யாகுமரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# அறிவியல் தொழில் நுட்பத்துக்கும், ஆராய்ச்சிக்கும் மத்திய அரசு அதிக பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்

## வி.ஐ.டி. வேந்தர் ஜி.விசுவநாதன் கோரிக்கை



**வேலூர் செப். 23-**

அறிவியல் தொழில்நுட் பத்துக்கும் ஆராய்ச்சிக்கும் மத்திய அரசு அதிக பணம் செலவழிக்க வேண்டும் என்று கிராவிடாஸ்- 23 அறி வுசார் திருவிழா தொடக்க விழாவில் வி.ஐ.டி வேந்தர் ஜி.விசுவநாதன் பேசினார்.

வி.ஐ.டி பல்கலைகழகத் தின் சார்பில் 14 ஆம் ஆண் டாக கிராவிடரஸ்- 23 அறிவு சார் தொழில்நுட்பத் திரு விழா மூன்று நாட்கள் நடை பெறுகிறது. இதில் 13 ஆயி ரம் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். 150 க் கும் மேற்பட்ட போட்டிகள் நடைபெறுகிறது. போட்டி யில் வெற்றி பெறும் மாண வ, மாணவிகளுக்கு ரூ.20 லட் சம் மதிப்பில் பரிசுகள் வழங் கப்பட உள்ளது. இதன் தொடக்க விழா நேற்று நடந் தது. விழாவிற்கு வி.ஐ.டி வேந்தர் ஜி. விசுவநாதன் தலைமை தாங்கி திருவி ழாவை தொடங்கி வைத்தார். அப்பொழுது அவர் அறிவித் தவுடன்கீழே இருந்த ரோபோ கிராவிடாஸ்-23 லோகோவை அறிமுகம் செய்து இசைத் தட்டை ஒலித்தது. இதனைப் பார்த்த மாணவ, மாணவிகள் கைதட்டி ஆரவாரம் செய்த னர்.துணைத்தலைவர்கள் சங் கர் விசுவநாதன், ஜி.வி. செல் வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் வி.ஐ.டி. வேந் தர் ஜி.விசுவநாதன் பேசியதா வது :- விஐடி பல்கலைக்கழ கத்தில் 60 நாடுகளைச் சேர்ந்த 80 ஆயிரம் மாணவ, மாணவி கள் கல்வி பயில்கின்றனர்.க டந்த ஆண்டு 400 தேசிய மற் றும் சர்வதேச கம்பெனிகள் வி.ஐ.டி.க்கு வந்து மாணவர் களை வேலைவாய்ப்புக்கு தேர்வு செய்து சென்றனர். இதற்காக ஆசிரியர்களை நான் பாராட்டுகிறேன். இந்தி யாவில் 14 வயதுக்கு உட் பட்ட குழந்தைகளுக்கு கல்வி இலவசமாக அளிக்கப் படுகிறது. ஆனால் இது அரசு பள்ளியில் மட்டும் தான். தனியார் பள்ளிகளில் கிடை யாது.

உலகத்தில் உள்ள 25 நாடு களில் பல்கலைக்கழக அள வில் இலவச கல்வி அளிக் கப்படுகிறது. குறிப்பாக ஜெர் மனியில் வெளிநாட்டு மாண வ, மாணவிகளுக்கும் இலவ சமாக கல்வி வழங்கப்படுகி றது.ஆனால் நாம் இன்னும் அந்த நிலையை அடைய முடியவில்லை. கிராமப்பு றங்களில் உள்ள மாணவ, மாணவிகளை உயர்கல்வி படிக்க வைக்க அவர்களின் பெற்றோர்கள் படும் கஷ்டம் சொல்லி மாளாது. சிலர் நகை களை அடகு வைத்தும், சிலர் தங்களுடைய சொத்தையே விற்றும் அவர்களுடைய பிள் ளைகளை படிக்க வைக்கின் றனர்.

இந்தியா வளர்ந்த நாடாக உள்ளது. ஆனால்அறிவியல் தொழில் நுட் பத் துக் கும், ஆராய்ச்சிக்கும் நாம் முக்கி யத்துவம் கொடுப்பதில்லை. ஜப்பான், கொரியா உள்பட பல்வேறு நாடுகளில் ஆராய்ச் சிக்கு அதிகம் செலவழிக்கின் றனர். கண்டுபிடிப்புகளில் உலக அளவில் இந்தியா 46வது இடத்தில் உள்ளது. ஆராய்ச்சிக்கு இஸ்ரேல் நாடு தான் அதிக பணத்தை செல வழிக்கிறது. இந்தியா 0.7 சத வீதம் தான் செலவழிக்கிறது. ஆராய்ச்சியில் நாம் பின்தங்கி உள்ளோம். இந்தியாவில் 27 சதவீதம் பேர்தான் உயர் கல்வி பெறுகின்றனர். மற்ற வர்களில் நிலை என்ன?. பொருளாதாரத்தில் இந்தியா தற்போது 5வது இடத்தில் உள்ளது.நாமும் தொழில்து றையில் வளர்ந்து வருகி றோம். எல்லோரும் உயர் கல்வி பெற வேண்டும். அதற்காக வேலூரில் ஒரு அறக்கட்டளை ஏற்படுத்தி யுள்ளோம். அந்த அறக்கட் டளை மூலம் 8 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகை வழங்கியுள் ளோம். இது குறிப்பாக 3ல் 2பங்கு பெண்கள் தான் உத வித்தொகை பெற்றுள்ளனர்.

அறிவியல் தொழில்நுட் பத்திற்கும் ஆராய்ச்சிக்கும் மத்திய அரசு அதிக பணத்தை செலவழிக்க வேண்டும். உயர்கல்வி பயில்வதில் தமிழ்நாடு 50 சதவீதத்தை கடந்துள்ளது. பொருளாதாரத் தில் பீகார் மாநிலம் மிகவும் பின்தங்கியுள்ளது. மத்திய அரசு அதற்கு தனிக்கவனம் செலுத்த வேண்டும். இவ் வாறு அவர் பேசினார்

விழாவில் பல்கலைக்க ழக துணைவேந்தர் ராம்பாபு கோடாலி, இணை துணை வேந்தர் பார்த்தசாரதி மல் லித், பதிவாளர் ஜெயபாரதி உள்பட பலர் கலந்து கொண் டனர். பின்னர் மாணவ, மாணவிகள் தயாரித்திருந்த அறிவியல் கண்டுபிடிப்பு களை வேந்தர் ஜி.விசுவநா தன், துணைத் தலைவருக்கு சங்கர் விசுவநாதன், ஜி.வி. செல்வம், சிறப்பு விருந்தினர் அனுஜ்பல்லா, கவுரவ விருந் தினர் பாராஸ் பரிக் உள்பட அனைவரும் பார்வையிட்ட னர்.

கண், ரத்த தானம் செய்வீர்

ENROLMENT NOTICE
After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **SNEHA. R, D/o. S. Rajkumar, Date of Birth: 11-04-2000,** Permanently residing at **D.No. 206, Thuthikadu Koot Road, Thuthikadu, Vellore Dist - 632113.** Intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.
SNEHA. R

# கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கிய முதலமைச்சருக்கு திருவொற்றியூர் மண்டல கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம்

**திருவொற்றியூர் செப் 23**

பெருநகர சென்னை மாந கராட்சி முதல் மண்டலமான திருவொற்றியூரில் மண்டல குழுத் தலைவர் தி.மு.தனிய ரசு தலைமையில் உதவி ஆணையர் நவேந்திரன் மற் றும் அரசு அதிகாரிகள் 50க்கும் மேற்பட்டோர் முன்னிலை யில் மண்டலகூட்டம் நடை பெற்றது.

கூட்டம் தொடங்கியதும் தலைவர் தி மு தனியரசு ஒரு கோடியே 6 லட்சம் குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மக ளிர் உரிமை தொகை வழங் கிய முதலமைச்சர்மு க ஸ்டா லினிக்கு நன்றி பாராட்டு தீர் மானம் கொண்டு வந்து நிறை வேற்றினார்.அதன் பின்பு



திமுக காங்கிரஸ் சிபிஎம் கவுன்சிலர்கள்12 பேர் தங்கள் வார்டில் உள்ள குறைகளை எடுத்து கூறினார்கள்.அதே போல் அதிமுக கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் பேசும் போது தனது ஏழாவது வார் டில் உள்ள கங்கை அம்மன் கோயில் தெருவில் அப்ரூவட் இல்லாமல் புதிதாக கட்டிய ஒரு கடை வீட்டுக்கு மாநக ராட்சி உதவி பொறியாளர் ராஜாராம் ரூபாய் 25,ஆயிரம் லஞ்சம் வாங்கி கொண்டு கடை கட்ட அனுமதி தந்துள் ளார்.அதேபோல் பல பணிக ளுக்கு நான் வெளிநாடு சென்ற போது எனது பெயரை சொல்லி முறைகேடு செய் துள்ளார்.அவர் மீது மாநக ராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ராஜாராம் கவுன்சில ரின் குற்றச்சாட்டால் திக்கு முக்காடி சமாளித்தார்.இதை கவனித்த உதவிஆணையர் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்ப டும் என்றார்.அதிமுக கவுன்சி லரின் குற்றச்சாட்டால் மன்ற கூட்டம் பரபரப்பானது.

# வேன் படிக்கட்டில் தொங்கிய பெண் போலீசை நிறுத்தாமல் இழுத்து சென்ற டிரைவர் கைது

**சென்னை செப் 23-**

சென்னையை அடுத்த கானத்தூர் போலீஸ் நிலையத் தில் போக்குவரத்து பெண் போலீசாக வேலை பார்த்து வருபவர் ஜீவா (வயது 34).

நேற்று முன்தினம் இரவு கேளம்பாக்கம் வீராணம் சாலையில் கடும் போக்குவ ரத்து நெரிசல் ஏற்பட்டது. அப் போது பெண் போலீஸ் ஜீவா போக்குவரத்தை ஒழுங்குப டுத்தும் பணியில் ஈடுபட்டி ருந்தார்.

அப்போது புதுப்பாக்கத் தில் இருந்து தனியார் நிறு வன ஊழியர்களை ஏற்றிக் கொண்டு வேன் ஒன்று திருப் போரூர் நோக்கி சென்றது. இந்த வேனை மானாம்ப தியை சேர்ந்த டிரைவர் பெரு மாள் ஓட்டினார். அவர் குடி போதையில் இருந்தார். போக் குவரத்து நெரிசலில் சிக்கி நின்று கொண்டிருந்த வேன் டிரைவர் பெருமாள் தொடர்ச் சியாக ஹாரன் அடித்துள்ளார். இதனால் பெண் போலீஸ் ஜீவா வேன் டிரைவரை தட் டிக் கேட்டார். ஆனாலும் வேன் டிரைவர் பெருமாள் தொடர்ந்து ஹாரன் அடித்தார். அதை பெண் போலீஸ் ஜீவா கண்டித்தார். இதனால் ஆத்தி ரம் அடைந்த வேன் டிரைவர் பெருமாள், பெண் போலீஸ் ஜீவா மீது மோதுவது போல் வேனை ஓட்டி அவர் மீது உர சியபடி சென்றார்.இதனால் அதிர்ச்சி அடைந்த பெண் போலீஸ் ஜீவா வேனுக்குள் ஏற முயன்றார். வேனின் படிக் கட்டை பிடித்து அவர் தொங் கிய நிலையில் இருந்தபோது டிரைவர் பெருமாள் வேனை நிறுத்தாமல் ஓட்டி பெண் போலீஸ் ஜீவாவை இழுத்து சென்றார். இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த மற்ற வாகன ஓட்டிகள் தங்களது வாகனங்களை வேனின் குறுக்கே நிறுத்தி பெண் போலீஸ் ஜீவாவை மீட்டனர்.

பின்னர் கேளம்பாக்கம் போலீசாருக்கு தகவல் தெரி வித்தனர். போலீசார் உட னடி யாக அங்கு வந்தனர். காயம் அடைந்த பெண் போலீஸ் ஜீவாவை சிகிச்சைக்காக கேளம்பாக்கத்தில் உள்ள தனி யார் மருத்துவமனையில் அனுமதித்தனர்.இந்த சம்ப வம் தொடர்பாக பள்ளிக்க ரணை போலீசார் வழக்குப்ப திவு செய்து வேன் டிரைவர் பெருமாளை கைது செய்தனர். வேனையும் பறிமுதல் செய்து டிரைவர் பெருமாளிடம் விசா ரணை நடத்தி வருகிறார்கள்.

# சென்னை வில்லிவாக்கத்தில் வயதான தம்பதியை கட்டிப்போட்டு 75 பவுன் நகை - ரூ.3.5 லட்சம் கொள்ளை

**சென்னை செப் 23-**

வில்லிவாக்கம், சிட்கோ நகர், 2-வது மெயின் ரோட்டை சேர்ந்தவர் சோழன் (வயது65). இவரது மனைவி வனஜா (63). இவர்களுக்கு 2 மகன், ஒரு மகள் உள்ளனர். அவர்கள் அனைவரும் திருமணமாகி தனித்தனியாக வேறு இடங்க ளில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள். வயதான தம்ப தியான சோழன்-வனஜா மட் டும் வீட்டில் தனியாக இருந் தனர்.

**கொள்ளை**

இந்தநிலையில் நேற்று முன் தினம் இரவு அவர்கள் வழக்கம் போல் சாப்பிட்டு விட்டு தூங்கினர். அதிகாலை 3 மணியளவில் வீட்டின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு கதவை திறந்தபோது முகத்தை மறைத்தபடி குல்லா அணிந்து வந்த 5 பேர் கும்பல் கையில் பட்டாக் கத்தியுடன் நிற்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.திடீரென அவர் கள் கத்திமுனையில் சோழன்-வனஜாவை மிரட்டி னர். மேலும் சத்தம்போட் டால் குத்தி கொலை செய்து விடுவதாக எச்சரித்தனர்.

இதனால் தம்பதி பயத் தில் உறைந்து போனார்கள். உடனே மர்ம கும்பல் சோழன்-வனஜாவை கயிற் றால் அருகில் இருந்த சோபா வுடன் கட்டினர். மேலும் அவர்களது வாயில் துணியை யும் திணித்தனர்.

பின்னர்மர்மகும்பல் பீரோ வில் இருந்த 75 பவுன் நகை மற்றும் ரூ.3½ லட்சம் ரொக் கம் மற்றும் பொருட்களை கொள்ளையடித்து அங்கி ருந்து தப்பி சென்று சென்று விட்டனர். அதிர்ச்சியில் இருந்த தம்பதி நீண்ட நேரம் அலறிய பின்னரே சத்தம் கேட்டு பக்கத்து வீட்டில் உள் ளவர்கள் வந்தனர். அப்போது தான் வீட்டுக்குள் கொள்ளை யர்கள் புகுந்து நகை-ப ணத்தை அள்ளிச்சென்று இருப்பது தெரிந்தது.

இதுகுறித்து வில்லிவாக் கம் போலீசுக்கு தகவல் தெரி விக்கப்பட்டது. இன்ஸ்பெக் டர் புருஷோத்தமன் மற்றும் போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். வீட் டில் வயதான தம்பதி தனி யாக இருப்பதை அறிந்து கொள்ளை கும்பல் கைவ ரிசை காட்டி உள்ளனர்.எ னவே தம்பதிக்கு ஏற்கனவே அறிமுகமான நபர்கள் அல் லது அவர்களது வீட்டிற்கு வந்து சென்ற நபர்கள் இதில் ஈடுபட்டு இருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கிறார்கள். இது தொடர்பான விபரங் களை போலீசார் சேகரித்து வருகிறார்கள்.மேலும் அப்ப குதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் கொள்ளையர் களின் உருவம் பதிவாகி உள் ளதா? என்றும் ஆய்வு செய்து வருகின்றனர்.

கொள்ளை நடந்த வீடு குடியிருப்புகள் நிறைந்த பகுதி ஆகும். சோழனின் வீட் டின் மேல் பகுதியில் 2 வீடுக ளும், கீழ்பகுதியில் 3 வீடுக ளும் உள்ளன. கொள்ளையர் களை தடுத்த போது வனஜா வின் கையில் லேசான வெட் டுக்காயம் ஏற்பட்டது. சோழன் இருதய நோயாளி ஆவார். அவர் மருத்துவ செல வுக்கு பணத்தை சேமித்து வைத்து இருந்தார். அதனை கொள்ளையர்கள் அள்ளிச் சென்றுவிட்டனர்.வயதான தம்பதியை கட்டிப்போட்டு நகை-பணம் கொள்ளை அடிக் கப்பட்ட சம்பவம் வில்லி வாக்கம் பகுதியில் பெரும் பர பரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வழிப்பறி கொள்ளையனுக்கு 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை

**சென்னை செப் 23-**

சென்னை, புளியந்தோப்பு பகுதியில் வசித்து வரும் லியாகத், என்பவர் கடந்த 09.01.2019 அன்று டி.பி சத்தி ரம், ஈஸ்ட் கிளப் 15வது குறுக் குத் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த எதிரி ராஜேஷ் கண்ணா என்பவர் மேற்படி லியாகத்தி டம் கத்தியைக் காட்டி, மிரட்டி அவர் வைத்திருந்த பணம் ரூ.200/-ஐ எடுத்து கொண்டு தப்ப முயன்றுள் ளார். தகவலறிந்த டி.பி சத்தி ரம் காவல் நிலைய காவல் குழுவினர் மேற்படி எதிரி ராஜேஷை பிடிக்க முற்பட்ட போது, காவல் குழுவினரை கத்தியால் தாக்க முயற்சி செய் துள்ளார். இது குறித்து லியா கத் டி.பி சத்திரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகா ரின் பேரில் வழக்கு பதிவு செய்து எதிரி ராஜேஷ் கண் ணா, என்பவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவ்வழக்கு தொடர்பாக, உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள 1வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசா ரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து இவ்வழக்கில் நேற்று முன் தினம் தீர்ப்பு வழங்கப்பட் டது.

மேற்படி வழக்கில் எதிரி ராஜேஷ் கண்ணா மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், மேற் படி ராஜேஷ் கண்ணாவுக்கு 7 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.4,500/- அபராதமும், விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

மேற்படி வழக்கில் சிறப் பாக புலனாய்வு செய்து, நீதி மன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற் றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த டி.பி சத்திரம் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவி னரை உயரதிகாரிகள் வெகு வாகப் பாராட்டினர்.

# சென்னை அண்ணாநகரில் பிரபல பெண் கஞ்சா வியாபாரி கைது

**சென்னை செப் 23-**

புளியந்தோப்பு, கே.பி. பூங்காவை சேர்ந்தவர் வேல ழகி (65). பிரபல கஞ்சா வியா பாரி. இவர் மீது பேசின் பிரிட்ஜ், புளியந்தோப்பு உள் ளிட்ட போலீஸ் நிலையங்க ளில் மொத்தம் 55 வழக்குகள் உள்ளது.

இந்தநிலையில் வேலழகி அண்ணாநகர் பகுதியில் கஞ்சா விற்பனை செய்வதாக அண்ணாநகர் மது விலக்கு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் விரைந்து சென்று வேலழகியை கைது செய்த னர். அவரிடம் இருந்து 3 கிலோ கஞ்சா பறிமுதல் செய் யப்பட்டது.

**சிறையில் அடைப்பு**

கைதான வேலழகி போலீ சாரின் பட்டியலில் "பி" பிரிவு ரவுடியாகவும் உள்ளார். அவரை போலீசார் கோர்ட் டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# சென்னை அடையாறு மண்டலம், பெசன்ட் நகர் பகுதியில் டெங்கு விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்



**சென்னை,செப்.23**

சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், பெசன்ட் நகர், அஷ்டலட்சுமி கோயில் அருகில் (22.09.2023) நடைபெற்ற டெங்கு விழிப்பு ணர்வு கண்காட்சி மற்றும் காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத் துவ முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப் பிரமணியன் அவர்கள் தொடங்கி வைத்துப் பார்வை யிட்டார். இதனைத் தொடர்ந்து, அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் இல்லங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் சென்று, டெங்கு தடுப்பு நட வடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வு துண்டு பிரசு ரங்கள் மற்றும் பிளிச்சிங் பவு டர் பாக்கெட்டுகளை வழங்கி விழிப்புணர்வினை ஏற்படுத் தினார்.

பின்னர், அமைச்சர் இப்ப குதியில் டெங்கு கொசு ஒழிப்பு நடவடிக்கைகளான கொசுப்புகை மருந்து அடித் தல் மற்றும் கொசு மருந்து தெளிக்கும் பணியினைத் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள "Health Walk" திட்டத்தின் கீழ், பெசன்ட் நகர் பகுதியில் மாண்புமிகு மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரம ணியன் அவர்கள் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடை பாதையை தேர்வு செய்து உறு திப்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் செய்தியாளர்களி டம் தெரிவித்ததாவது: மழைக் காலங்களில் ஏற்படும் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய் பாதிப்புகளிலி ருந்து பொதுமக்களைப் பாது காக்கும் வகையில், முதல மைச்சர் அறிவுறுத்தலின்படி, கொசு ஒழிப்பு நடவடிக்கை கள் மற்றும் முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக வே, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல வேறு துறைகளுடன் ஒருங்கி ணைந்து அந்தந்த மாவட்ட நிர்வாகம் பொதுமக்களுக்கு டயர், பிளாஸ்டிக் கப்புகள், தேங்காய் சிரட்டை போன்ற கொசு உற்பத்தியாகும் பொருட்களை அகற்றிட விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கொசு ஒழிப்பு நடவடிக்கை களை மேற்கொள்ளுதல், காய்ச் சல் கண்ட இடங்களில் உட னடி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் போன்ற தொடர் நடவடிக்கை களை தீவிரமாக மேற்கொள்ள தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத்துறை முதன்மைச் செய லாளர் அவர்கள் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்கள்.

இதுபோன்ற கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் அமைத்தல் போன்ற பணிகள் தென்மேற்குப் பரு வமழை தொடங்குவதற்கு முன்பாகவும், வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவும் நடத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடந்த ஆண்டு மக்கள் நல்வாழ்வுத்து றையும், ஊரக உள்ளாட்சித்து றையும், நகர்ப்புர உள்ளாட் சித் துறையும் ஒருங்கிணைந்து மாவட்ட அளவில் 600க்கும் மேற்பட்ட அலுவலர்களை ஒன்றிணைத்து கூட்டம் நடத் தப்பட்டு, கொசு ஒழிப்பு நட வடிக்கைகளை மேற்கொள்ள வும், காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்களை ஏற்ப டுத்திடவும், பொதுமக்க ளுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத் திடவும் பணிகள் மேற் கொள்ள அறிவுறுத்தப்பட் டது.

அதன் விளைவாக, கடந்த மூன்று ஆண்டுகளாக டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் கட்டுப்பாட்டில் உள்ளன. தமிழ்நாட்டில் 2012ஆம் ஆண்டு 13,204 நபர்களுக்கு டெங்கு பாதிப்பு ஏற்பட்டு, இதில் 66 நபர்கள் டெங்கு பாதிப்பில் இறந்துள்ளனர். 2017ஆம் ஆண்டு 23,294 நபர்க ளுக்கு டெங்கு பாதிப்பு ஏற் பட்டு, 65 நபர்கள் டெங்கு பாதிப்பில் இறந்துள்ளனர்.

முதலமைச்சர் இது போன்ற பாதிப்புகளை தமிழ் நாடு சந்திக்கக் கூடாது என்ப தற்காக தொடர்ந்து ஒவ் வொரு ஆண்டும் பருவம ழைக்கு முன்பாக முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தியதன் அடிப்படையில், நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது.

இதுதொடர்பாக, தமிழ் நாடு அரசின் தலைமைச் செய லாளர் அவர்கள் தலைமை யில் பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்களுட னான ஆய்வுக் கூட்டம் நடை பெற்றது. தொடர்ந்து, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் பெருநகர சென்னை மாநக ராட்சி போன்ற நகர்ப்புர உள் ளாட்சி அமைப்புகளுடன் ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் என் னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். அலுவ லர்கள் வாரியாக எந்த மாதிரி யான நடவடிக்கைகளை தொடர வேண்டும் என அறி வுறுத்தப்பட்டது. இதன் மூலம் அனைத்து மாவட்டங் களிலும் இதுபோன்ற முன் னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகி றது.

அதனடிப்படையில், பெசன்ட் நகர் பகுதியில் பெருநகர சென்னை மாநக ராட்சியுடன் இணைந்து இந் தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. பொதுமக்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று அவர்களின் தேவைக் காக வைத்திருக்கும் தண்ணீ ரினை சரியான முறையில் மூடி வைத்திருக்க அறிவுறுத் தப்பட்டுள்ளது. கொசுக்கள் எவ்வாறு உருவாகின்றன. எந் தெந்த பொருட்களில் உருவா கின்றன. அதனை ஒழிக்கும் முறை குறித்த விழிப்புணர்வு சுவரொட்டிகள் வீடுகள் தோறும் ஒட்டப்பட்டு வரு கின்றன. மேலும், இதுகுறித்த துண்டு பிரசுரங்களும் வழங் கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 2,972 அரசு மற்றும் தனியார் மருத் துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் உள்ளவர்கள் கண்ட றியப்பட்டு, இரத்தம் மற்றும் நகரங்கள் வாரியாக பட்டியல் கள் தயார்செய்து, அந்தந்த மாவட்டங்களுக்கு நோய்த்த டுப்பு நடவடிக்கைகளை உட னடியாக மேற்கொள்ள அறிவு றுத்தப்பட்டுள்ளது. உள்ளாட் சித் துறைகளுடன் இணைந்து கொசுப்புழு ஒழிப்பு நடவடிக் கைகளை மேற்கொள்ள சுமார் 23,717 தற்காலிகப் பணியாளர் கள் தினசரி ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்.

பருவமழைக்காலங்களில் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்குத் தேவையான உயிர்க்காக்கும் மருந்துகளும், இரத்த அணுக்கள் பரிசோத னைக் கருவிகள், இரத்தக் கூறு கள் மற்றும் இரத்தம் ஆகி யவை போதிய அளவு இருப்பு வைக்கவும் அறிவு றுத்தப்பட்டுள்ளது என்றார்.

**கலந்து கொண்டோர்**

இந்நிகழ்வின் போது, மேயர் ஆர். பிரியா, வேளச் சேரி சட்டமன்ற உறுப்பி னர் ஜே. எம். எச். அசன் மௌலானா ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர் லால் குமாவத், , நிலைக்கு ழுத் தலைவர் (பொது சுகாதா ரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி வட்டார துணை ஆணையா ளர் (தெற்கு) .எம்.பி. அமித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி. சி.செல்வ விநாயகம் கலந்து கொண்டனர்.

# சென்னை மீன்பிடி துறைமுகம் கொலை வழக்கில் 4 பேர் கைது

**சென்னை செப் 23-**

சென்னை, எண்ணூர், நேதாஜி நகர், சுனாமி குடியிப் பில் வசித்து வந்த சூர்யா (எ) கேரளா சூர்யா, என்பவர் மீன் பிடி தொழில் செய்து வந்தார். மேலும் இவர் காசிமேடு காவல் நிலைய சரித்திர பதி வேடு குற்றவாளி ஆவார். சூர்யா (எ) கேரளா சூர்யா நேற்று முன்தினம் இரவு, மீன் பிடி துறைமுகம், இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் அரு கில் நின்று கொண்டிருந்த போது, அங்கு வந்த 4 பேர் கொண்ட கும்பல் மேற்படி சூர்யா (எ) கேரளா சூர்யாவை கத்தி மற்றும் கருங்கல்லால் தாக்கிவிட்டு, தப்பிச் சென் றுள்ளனர். இதில் பலத்த இரத்த காயமடைந்த சூர்யா (எ) கேரளா சூர்யா அரசு மருத் துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். மேற்படி சம் பவம் குறித்து, சூர்யா (எ) கேரளா சூர்யாவின் மனைவி பிரியங்கா, என்பவர், மீன்பிடி துறைமுகம் காவல் நிலையத் தில் கொடுத்த புகாரின் பேரில் கொலை முயற்சி வழக்குப்ப திவு செய்து விசாரணை மேற் கொள்ளப்பட்டது.

மீன்பிடி துறைமுகம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழு வினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம் பந்தப்பட்ட 1.சந்தோஷ், 2.நி சாந்தன், 3.லோகேஷ், 4.குண சேகரன், வஆகிய 4 பேரை கைது செய்தனர். அவர்களிட மிருந்து 2 கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட நிசாந்தன் என் பவர் முன்விரோதம் காரண மாக தனது நண்பர்களுடன் சேர்ந்து, சூர்யாவை கத்தி மற் றும் கல்லால் தாக்கியுள்ளது தெரியவந்தது.மேலும் சந் தோஷ் என்பவர் மீது ஏற்க னவே 1 கொலை வழக்கு உட் பட 3 குற்ற வழக்குகள் உள்ள தும், நிசாந்தன் மீது 1 கொலை வழக்கும், லோகேஷ் மீது 1 அடிதடி உட்பட 2 குற்ற வழக் குகளும் உள்ளது தெரியவந் தது.கைது செய்யப்பட்ட 4 பேரை , விசாரணைக்குப்பின் னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப் படி சிறையில் அடைக்கப்பட் டனர்.இந்நிலையில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சூர்யா (எ) கேரளா சூர்யா நேற்று (21.09.2023) மதியம் சிகிச்சை பலனின்றி, இறந்த காரணத்தி னால், மேற்படி கொலை முயற்சி வழக்கு கொலை வழக்காக மாற்றம் செய்யப் பட்டது.



**அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்எல்ஏ ஆகியோரை தென் சென்னை தெற்கு மாவட்ட திமுக அயலக அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட பி.கோபிநாத் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் 147 வது வட்ட செயலாளர் எஸ்.ஜி.மாதவன் உள்ளார்.**



**சென்னையில் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர்களுடான ஆய்வு கூட்டம் அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடந்தது.**



**திருவொற்றியூர் மண்டலம் எண்ணூர் அன்னை சிவகாமி நகரில் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு கோப்பைகளைசென்னைவடகிழக்குமாவட்டதிமுகவர்த்தக அணி அமைப்பாளர் லயன் வீ.தியாகராஜன் வழங்கினார். உடன் 3 வது வட்ட பகுதி பிரதிநிதி ஏ.ராஜேந்திரன் உள்ளார்.**

# காஞ்சிபாடி கிராமத்தில் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் ஆய்வு



**திருவள்ளூர்,செப்,23.**

இந்திய அளவில் தானியங்களில் நெல்,கோதுமைக்கு அடுத்தப்படியாக சோளம்,கம்பு,இராகி,குதிரைவாலி,வரகு போன்ற சிறுதானியங்கள் பயிரிடப்படுகின்றது.தற்போது 2023-ம் ஆண்டு சர்வதேச சிறுதானிய பயிர் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்க சிறு மற்றும் குறு விவசாயிகள் பெருமளவில் சாகுபடி செய்ய பல்வேறு தொழில்நுட்பங்கள் பரிந்துரை செய்யப்படுகின்றது. சிறுதானிய பயிர் சாகுபடி பரப்பை ஊக்குவிக்க சிறுதானிய விதைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.அதன்படி திருவள்ளூர் மாவட்டம்,திருவாலங்காடு வட்டம், காஞ்சிபாடி கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் கம்பு கோ-10 இரக விதைப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.கம்பு கோ-10 இரகப் பயிரின் வயது 85-90 நாட்கள், கம்பு கோ-10ற்கு ஆடிப்பட்டம், சித்திரை பட்டம், புரட்டாசிப் பட்டம் ஏற்றது. திரட்சியான விதைகள் மற்றும் மிதமான நெருக்கமுடைய நீளமான கதிர்களைக் கொண்டது.கனிம இரும்புச் சத்து, துத்த நாக சத்து மற்றும் அதிக புரதச்சத்து கொண்டது. குருத்து ஈ தாக்குதலை தாங்கும் திறனுடையது.அடிசாம்பல் நோய் எதிர்ப்புத்திறன் கொண்டது . இவ்விதைப் பண்ணையை,திருவள்ளூர் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் ஜீவராணி ஆய்வு செய்து சிறுதானிய பயிர்களின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.மேலும் ஆய்வின்போது திருத்தணி, விதைச்சான்று அலுவலர் ரூபா மற்றும் உதவி விதை அலுவலர் மணிகண்டன் ஆகியோர் உடனிருந்தனர்.

# உலகக்கோப்பை கிரிக்கெட் தொடருக்கான பரிசுத்தொகை அறிவிப்பு




**அகமதாபாத்,செப்.23**


இந்தியாவில் 50 ஓவர் உலக கோப்பை தொடர் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெற உள்ளது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. உலக கோப்பை தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன.

வரும் அக்டோபர் மாதம் 5ம் தேதி போட்டி தொடங்கவுள்ள நிலையில், இந்திய அணி தனது முதல் ஆட்டத்தை அக்டோபர் 8ம் தேதி ஆஸ்திரேலியாவுடன் சென்னையில் மோதுகிறது. இதையடுத்து, உலகக்கோப்பை தொடருக்கான இந்திய அணியின் ஜெர்சியை சமீபத்தில் பிசிசிஐ வெளியிட்டது.

இந்நிலையில், உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கான பரிசுத் தொகையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அறிவித்துள்ளது. அதன்படி, சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு சுமார் ரூ.33 கோடி பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இறுதிப்போட்டியில் தோல்வியடையும் அணிக்கு சுமார் ரூ.16 கோடி பரிசும், அரையிறுதியில் தோல்வி அடையும் 2 அணிகளுக்கு தலா ரூ.6 கோடி பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், குரூப் சுற்றுடன் வெளியேறும் அணிகளுக்கு ரூ.82 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலக மல்யுத்த போட்டி:

# இந்திய வீராங்கனை அன்திம் வெண்கலப்பதக்கம் வென்றார்




**பெல்கிரேடு,செப்.23**

உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி செர்பியா தலைநகர் பெல்கிரேடில் நடந்து வருகிறது. இதில் நடந்த பெண்களுக்கான பிரீஸ்டைல் 53 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கத்துக்கான பந்தயத்தில் 19 வயது இந்திய வீராங்கனை அன்திம் பன்ஹால், சுவீடன் வீராங்கனை எம்மா ஜோனா டெனிஸ் மால்ம்கிரினை சந்தித்தார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அன்திம் 16-6 என்ற புள்ளி கணக்கில் ஐரோப்பிய சாம்பியனான எம்மாவை வீழ்த்தி வெண்கலப்பதக்கத்தை தனதாக்கினார். அத்துடன் அவர் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்ற 6-வது இந்திய வீராங்கனை என்ற பெருமையை பெற்றார்.

மேலும் அடுத்த ஆண்டு பாரீசில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கான 53 கிலோ எடைப்பிரிவு கோட்டாவையும் கைப்பற்றினார். இதன் மூலம் பாரீஸ் ஒலிம்பிக் மல்யுத்தத்தில் கோட்டாவை உறுதி செய்த முதல் இந்தியர் என்ற பெருமையை அன்திம் சொந்தமாக்கினார்.

## உ.பி.யில் பரபரப்பு: ரயில்வே

# பெண் போலீசை தாக்கியவர் என்கவுண்ட்டரில் சுட்டுக்கொலை

**லக்னோ, செப். 23-**



உத்தர பிரதேசத்தில் ரயில்வே பெண் போலீசை தாக்கிய நபர் என்கவுண்ட்டரில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி கண்டோன்மென்ட் ரயில் நிலையத்தில் இருந்து பிரயாக்ராஜ்சங்கம் வரை சராயு எக்ஸ்பிரஸ் ரயில் இயங்கி வருகிறது. கடந்த மாதம் 30-ம் தேதி இந்த ரயிலில் பயணம் செய்த பெண் போலீஸ் ஒருவரை மர்ம நபர்கள் கொடூரமாக தாக்கியுள்ளனர். இதில் பலத்த காயம் அடைந்த பெண் போலீஸ், ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடினார். அவரை மீட்ட பயணிகள் அருகே உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது உடல் நலம் தேறியுள்ளார்.

இது குறித்து வந்த புகாரின் பேரின் அயோத்தி போலீசார் வழக்குப்பதிவு செய்து தாக்குதல் நடத்தியவர்களை தீவிரமாக தேடிவந்தனர். விசாரணையில் அனீஷ் கான் என்பவர் தான் பொண் போலீசை கொடூரமாக தாக்கியது தெரியவந்தது. இதையடுத்து அனீஷ் கானை போலீசார் வலை வீசி தேடி வந்த நிலையில்,அனீஷ் கான் தனது கூட்டாளிகளுடன் பதுங்கி இருக்கும் இடத்தை போலீசார் கண்டுபிடித்தனர். இதையடுத்து, சிறப்பு அதிரடி படையினர் மற்றும் போலீசார் அவர்களை கைது செய்ய முயன்றனர். அப்போது அனிஷ் கான் உள்பட 3 பேர் இருந்தனர்.

போலீசாரை பார்த்தவுடன் அவர்கள் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்ப முயன்றனர். உடனே சுதாரித்த போலீசார், தற்காப்புக்காக பதில் தாக்குதல் நடத்தினர். இருதரப்புக்கும் இடையே நடைபெற்ற இந்த துப்பாக்கிச்சண்டையில் அனீஷ் கான் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆசாத், விசாம்பர் தயால் ஆகிய இரண்டு பேரும் காயம் அடைந்த நிலையில் போலீசார் கைது செய்துள்ளனர். ரயிலில் பெண் போலீஸ் மீது கொடூரமாக தாக்குதல் நடத்திய வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் போலீசார் என்கவுண்ட்டரில் கொல்லப்பட்டு இருப்பது அந்த மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## சனாதன ஒழிப்பு மாநாடு தொடர்பாக

# தமிழக அரசு பதிலளிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவு

### ஐகோர்ட்டை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தல்

**புதுடெல்லி, செப். 23-**

சனாதன ஒழிப்பு மாநாடு தொடர்பாக அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சேகர் பாபு பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பி நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் சனாதன மாநாட்டில் அமைச்சர்கள் பங்கேற்றது பற்றி தமிழக அரசு பதிலளிக்கவும் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் சென்னை ஐகோர்ட்டை அணுகுமாறு மனுதாரருக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

சென்னையை சேர்ந்த வழக்கறிஞர் ஜெகநாத் சார்பில் வழக்கறிஞர் பாலாஜி சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவில்,

சென்னையில் செப்டம்பர் 2-ம் தேதி சனாதன ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. இந்து மதம், சனாதன தர்மத்தை குறிவைத்து, தகாத முறையில் பேசி, அவமானப்படுத்தும் வகையில் நடத்தப்பட்டு உள்ளது.

சனாதனத்தை டெங்கு மலேரியாவை போல ஒழிக்க வேண்டுமென தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியுள்ளார். சனாதன ஒழிப்பு மாநாட்டில் தமிழக அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சேகர் பாபு பங்கேற்றது அரசமைப்பு சாசனத்தின் 25,26 பிரிவுகள் மீறப்பட்டது, முரணானது என அறிவிக்க வேண்டும்.

சனாதன ஒழிப்பு மாநாட்டுக்கு தமிழீழ விடுதலை புலிகள் போன்ற பயங்கரவாத அமைப்பு நிதி வழங்கியதா என்பதை சி.பி.ஐ. விசாரிக்கும் வகையில் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கும், சி.பி.ஐ.க்கும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் அனிருதா போஸ், பேலா எம்.திரிவேதி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது,

அமைச்சர் ஒருவர் வெறுப்பு பேச்சை ஊக்குவிக்கிறார்; அவர் அரசின் பிரதிநிதி, தனிநபர் அல்ல என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. சனாதன சர்ச்சை விவகாரத்தில், தலையிட விரும்பவில்லை என்றும் இதில் ஐகோர்ட்டை ஏன் நாடக்கூடாது என மனுதாரருக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பி ஐகோர்ட்டை அணுகுமாறு அறிவுறுத்தினர்.

அதனை தொடர்ந்து சனாதன ஒழிப்பு மாநாடு தொடர்பாக அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சேகர்பாபு பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பி நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் சனாதன மாநாட்டில் அமைச்சர்கள் பங்கேற்றது பற்றி தமிழக அரசு பதிலளிக்கவும் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## ஆசிய விளையாட்டு போட்டி 2023 - கிரிக்கெட்

# இலங்கை பெண்கள் அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்



**பெய்ஜிங்,செப்.23**

சீனாவில் ஆசிய விளையாட்டு போட்டிகள் தொடங்க உள்ள நிலையில் கிரிக்கெட், கால்பந்து, கைப்பந்து உள்ளிட்ட சில போட்டிகள் முன்னதாக நடந்து வருகிறது. 20 ஓவர் போட்டியாக நடக்கும் கிரிக்கெட்டில் பெண்கள் பிரிவில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றன.

நேற்று காலை நடந்த 3-வது கால் இறுதி ஆட்டத்தில் இலங்கை- தாய்லாந்து அணிகள் மோதின. மழை காரணமாக ஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மழை நின்றதும் போட்டி 15 ஓவர்களாக குறைக்கப்பட்டு தொடங்கியது. டாஸ் ஜெயித்த தாய்லாந்து பேட்டிங்கை தேர்வு செய்தது. அந்த அணி விக்கெட்டுகளை இழந்து திணறியது. தாய்லாந்து அணி 15 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 78 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக சுத்திருவாங் 31 ரன் எடுத்தார். இலங்கை தரப்பில் இனோஷி பிரியதர்ஷினி 4 விக்கெட்டும் அட்டபப்பட்டு, தில்ஹாரி, சுகந்திகா குமாரி தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

பின்னர் 79 ரன்கள் இலக்குடன் இலங்கை அணி விளையாடியது. தொடக்க வீராங்கனைகளாக களம் இறங்கிய கேப்டன் அட்டபட்டு 27 ரன்னிலும், அனஷ்கா சஞ்சீவனி 32 ரன்னிலும் அவுட் ஆனார்கள். இலங்கை அணி 10.5 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 84 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்று அரை இறுதிக்கு தகுதி பெற்றது. 4-வது மற்றும் கடைசி கால் இறுதியில் வங்காள தேசம்- ஹாங்காங் அணிகள் மோதுகின்றன. இதில் வெற்றி பெறும் அணி நாளைமறுதினம் நடைபெறும் முதல் அரையிறுதி போட்டியில் இந்தியாவுடன் மோதும். அன்றைய தினம் நடைபெறும் 2-வது அரையிறுதியில் பாகிஸ்தான்- இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

## உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான

# தென்ஆப்பிரிக்க அணியில் இருந்து 2 வீரர்கள் விலகல்




**ஜோகன்னஸ்பர்க்,செப்.23**

13-வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவின் 10 நகரங்களில் அடுத்த மாதம் (அக்டோபர்) 5-ந் தேதி முதல் நவம்பர் 19-ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டிக்கான தென்ஆப்பிரிக்க அணியில் இடம் பெற்று இருந்த வேகப்பந்து வீச்சாளர்கள் அன்ரிச் நார்ட்ஜே முதுகு வலியாலும், சிசன்டா மகாலா இடது கால் முட்டியில் ஏற்பட்ட காயத்தாலும் அவதிப்பட்டு வருகின்றனர்.

சமீபத்தில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2-வது ஒருநாள் போட்டிக்கு களம் திரும்பிய நார்ட்ஜே, 5 ஓவர்கள் மட்டும் பந்து வீசி விட்டு வெளியேறியதுடன் தொடரில் இருந்தும் ஒதுங்கினார். இதேபோல் 3-வது ஒருநாள் போட்டியில் ஆடிய மகாலா காயத்தால் வெளியேறினார். இருவரும் தென்ஆப்பிரிக்க கிரிக்கெட் வாரியம் சார்பில் நடத்தப்பட்ட உடல் தகுதி சோதனையில் தேறவில்லை.

இதனையடுத்து உலகக் கோப்பை போட்டிக்கான தென்ஆப்பிரிக்க அணியில் இருந்து அன்ரிச் நார்ட்ஜே, சிசன்டா மகாலா ஆகியோர் விலகி இருக்கின்றனர். இது தென்ஆப்பிரிக்க அணிக்கு பெருத்த பின்னடைவாக கருதப்படுகிறது. அவர்களுக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர்கள் பெலக்வாயோ, லிசாட் வில்லியம்ஸ் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# சென்னையில் டெங்கு விழிப்புணர்வு பிரச்சாரம்

### அமைச்சர் சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்

**சென்னை, செப். 23-**

சென்னை பெசன்ட் நகர் ஓடை மாநகர் குடியிருப்பு பகுதிகளில் டெங்கு விழிப்புணர்வு பிரச்சாரத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

மழைக்கால வியாதிகளான டெங்கு, வயிற்று போக்கு, டைபாய்டு பரவாமல் இருக்க விழிப்புணர்வு பிரச்சாரம் நடந்து வருகிறது. சுகாதாரத்துறை உள்ளாட்சி துறைகள் இணைந்து கொசு ஒழிப்பு மற்றும் காய்ச்சல் கண்டறிதல், காய்ச்சல் கண்டறியும் பகுதிகளில் தடுப்பு நடவடிக்கை ஆகிய பணிகளை செய்து வருகிறார்கள்.

2972 அரசு மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகளில் இருந்து தினமும் காய்ச்சல் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்படுகிறது. 23 ஆயிரத்து 713 பணியாளர்கள் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். அனைத்து அரசு ஆஸ்பத்திரிகளிலும் மருந்துகள், ரத்தம் ஆகியவை இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இந்திய மருத்துவங்களான நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலை சாறு ஆகியவையும் வழங்கப்படுகிறது. கடந்த 9 மாதங்களில் 4227 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது கடந்த ஆண்டுகளை விட குறைவு தான்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பணியில் இருக்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பயோமெட்ரிக் வருகை பதிவேடு அமலுக்கு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஆசிய போட்டியில் இந்திய வீரர்களுக்கு தடை எதிரொலி:

# சீன பயணத்தை ரத்து செய்த அமைச்சர் அனுராக்




இந்தியாவின் மூன்று தடகள வீரர்களை ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க சீனா தடை விதித்துள்ள நிலையில், சீனாவுக்கு செல்ல இருந்த தனது பயணத்தை மத்திய இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் ரத்து செய்துள்ளார்.

சீனாவின் ஹோங்சு நகரில் நாளை 19-வது ஆசிய விளையாட்டுப் போட்டி தொடங்கவுள்ளது. இதில் கலந்து கொள்ளச் சென்ற அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த வுஷூ (WU SHU) வீரர்களான நைமன் வங்க்சு, ஒனிலு தேகா மற்றும் மேபுவுங் லாம்கு ஆகியோர் சீனாவில் நுழைய அந்நாட்டு அரசு தடை விதித்தது. இதற்கு இந்திய வெளியுறவுத் துறை கடும் கண்டனத்தைப் பதிவு செய்தது.

இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறுகையில், "சீனாவின் இந்த நடவடிக்கை, ஆசிய விளையாட்டின் உணர்வுகளை அவமதிப்பதாக, விளையாட்டு போட்டிகளின் விதிமுறைகளையும் மீறுவதாக உள்ளது" என்று கூறியுள்ளது.

இந்நிலையில், இந்திய வுஷூ அணியில் மீதமிருக்கும் 7 வீரர்கள், அணி நிர்வாகிகள் ஹாங்காங் சென்று அங்கிருந்து சீனாவுக்குள் நுழைகின்றனர். தடைவிதிக்கப்பட்டுள்ள இந்திய வீரர்களை விளையாட்டுத் துறை அமைச்சகம் இந்தியாவுக்கு திரும்ப அழைத்துள்ளது.

இதனிடையே, இந்தச் சம்பவம் குறித்து விளக்கமளித்துள்ள சீனாவின் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர், "விளையாட்டு போட்டியினை நடத்தும் நாடு என்ற அடிப்படையில், சட்டபூர்வமான ஆவணங்களுடன் ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள வரும் வீரர்களை சீனா வரவேற்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையில் நீடித்து வரும் அருணாச்சலப் பிரதேச எல்லைப் பிரச்சினை காரணமாக அப்பகுதியை இந்தியாவின் பகுதியாக ஏற்க சீனா மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## உலகக்கோப்பை தொடருக்கான

# ஆஸ்திரேலிய அணியின் புதிய ஜெர்சி அறிமுகம்

**மெல்போர்ன்,செப்.23**

இந்தியாவில் வரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் 50 ஓவர் உலகக்கோப்பை தொடர் நடைபெற உள்ளது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. உலகக்கோப்பை தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன.

இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை சென்னையில் சந்திக்கிறது. இந்நிலையில் உலகக்கோப்பையில் பங்கேற்க உள்ள ஆஸ்திரேலிய அணி புதிய ஜெர்சியை அறிமுகப்படுத்தி உள்ளது.

இதனை ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அதிகாரப்பூர்வ எக்ஸ் ( முன்பு டுவிட்டர்) தளத்தில் ஆல் ரவுண்டர் மேக்ஸ்வெல் புதிய ஜெர்சியை அணிந்திருந்த புகைப்படத்தை பதிவிட்டு அறிமுகப்படுத்தி உள்ளது.

# பாக்., கிரிக்கெட் வாரிய பொறுப்பில் இருந்து முகமது ஹபீஸ் விலகல்

**கராச்சி,செப்.23**

முகமது ஹபீஸ் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தொழில்நுட்பக் குழுவில் நியமிக்கப்பட்டார். முன்னாள் கேப்டன்கள் இன்சமாம்-உல்-ஹக், மிஸ்பா-உல்-ஹக் ஆகியோரையும் கொண்ட இக்குழு அணியின் முன்னேற்றத்திற்காக ஆலோசனைகளை வழங்கும். இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலகுவதாக முகமது ஹபீஸ் திடீரென்று அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் டுவிட்டரில் கூறும்போது, பாகிஸ்தான் கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன். எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கான எனது நேர்மையான ஆலோசனைகள் தேவைப்படும் போதெல்லாம் நான் எப்போதும் அளிப்பேன். எப்போதும் போல் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு எனது வாழ்த்துக்கள் என்று கூறியுள்ளார்.

எனினும் ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணியின் செயல் திறனை மதிப்பிடுவதற்க்காக நேற்று நடந்த கிரிக்கெட் வாரிய ஆலோசனை கூட்டத்தில் முகமது ஹபீசும் கலந்து கொண்டார். இதில் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், கேப்டன் பாபர் ஆசம், துணை கேப்டன் ஷதாப்கான் மற்றும் மிஸ்பா-உல்-ஹக் ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.க. மூத்த தலைவர்கள் டெல்லியில் முகாம்: மத்திய அமைச்சர் அமித்ஷாவை சந்திக்க திட்டம்?

**சென்னை, செப். 23-**

அ.தி.மு.க - பா.ஜ.க. இடையே கருத்து மோதல் நிலவி வரும் நிலையில், டெல்லியில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் முகாமிட்டுள்ளனர். அமித்ஷாவை சந்திக்க முன்னாள் அமைச்சர்கள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பேசுகையில், அண்ணா குறித்து அவர் பேசிய கருத்துகள் பரபரப்பையும், அ.தி.மு.க.வினரிடையே சலசலப்பையும் ஏற்படுத்தியது. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் அண்ணாமலைக்கு எதிரான கருத்துகளை கூறி வந்தனர். இந்த நிலையில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் எங்களை வைத்து தான் பா.ஜ.க.வுக்கு அடையாளமே இருக்கிறது. இனி அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இல்லை என்று கூறியிருந்தார்.

அது மட்டுமல்லாது, இதை வரவேற்கும் விதமாக அ.தி.மு.க.வினர் ஆங்காங்கே போஸ்டர் அடிக்க தொடங்கியது பரபரப்பை ஏற்படுத்தியது. அதேபோல பா.ஜ.க.வினரும் ஆங்காங்கே பதில் போஸ்டர் ஒட்டி வந்தனர். இந்த மோதல் போக்கை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் சமூக வலைதளங்களிலோ, பொதுவெளியிலோ அ.தி.மு.க. குறித்தோ, கூட்டணி குறித்தோ விமர்சிக்க வேண்டாம் என்று பா.ஜ.க.வினருக்கு அக்கட்சி தலைமை அறிவுறுத்தியதாக கூறப்பட்டது. அதை தொடர்ந்து இந்த விவகாரத்தில் அ.தி.மு.க.வும் பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் வாய்மொழி உத்தரவையடுத்து அமைதி காத்து வந்தது.

இந்த நிலையில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் டெல்லியில் முகாமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கேபி முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், சிவி சண்முகம், வேலுமணி, தங்கமணி உள்ளிட்ட 5 முன்னாள் அமைச்சர்கள் டெல்லி சென்றுள்ளனர். கொச்சி வழியாக டெல்லி சென்றதாகவும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்திக்க திட்டமிட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது. அமித்ஷாவிடம் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை குறித்து முறையிட திட்டமிட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், மாநில திட்டக்குழுவின் நான்காவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு, திட்டக்குழுவின் துணைத்தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச்செயலாளர்கள் நா.முருகானந்தம், டாக்டர் கே.கோபால், நிதித்துறை செயலாளர் எஸ்.நாகராஜன் மற்றும் ராம.சீனுவாசன், விஜயபாஸ்கர், நா.எழிலன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மகளிர் உரிமை திட்ட பயனாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து கடிதம்

சென்னை, செப்.23-
மகளிர் உரிமைத் தொகை திட்ட பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஸ்பீட் போஸ்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித்தனியே வாழ்த்து கடிதம் அனுப்பியுள்ளார்.

கடந்த சட்டமன்றதேர்தலின்போது தி.மு.க. அளித்த வாக்குறுதியின்படி தமிழகம் முழுவதும் பெண்களுக்கான மாதாந்திர உரிமை தொகை ரூ.1,000 வழங்கும் திட்டத்தை கடந்த 15-ம் தேதி அண்ணா பிறந்தநாள் அன்று காஞ்சிபுரத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

திட்டம் தொடங்கி வைப்பதற்கு முன்னதாகவே, பலருக்கு ரூ.1000 தொகை அனுப்பி வைக்கப்பட்டது. இதனால், பெண்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

அதன் பிறகு, உரிமைத் தொகை திட்டத்தில் ரூ.1000 பெறுவதற்கு விண்ணப்பம் செய்து, நிராகரிக்கப்பட்டவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. அதற்கான பணிகளும் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயன்பெறும் 1.06 கோடி பெண்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித்தனியே வாழ்த்து கடிதம் அனுப்பியுள்ளார். ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தனித்தனியாக ஸ்பீட் போஸ்டில் முதல்வரின் வாழ்த்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில், இனி மாதம்தோறும், ஆயிரம் ரூபாய் தங்களின் வங்கிக் கணக்கில் தமிழக அரசால் நேரடியாக வரவு வைக்கப்படும்.

கணக்கில் கொள்ளப்படாத பெண்களின் உழைப்புக்குத் தரப்படும் அங்கீகாரமே இத்தொகையாகும்.

இது உங்களுக்கான உதவித் தொகை அல்ல, உரிமைத் தொகை, உங்களில் ஒருவனான ஸ்டாலின் வழங்கும் உழைப்புத் தொகை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழலை பாதிக்காத...(1-ம் பக்க தொடர்ச்சி)

மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

பேரியம், சரவெடி ஆகிய இரண்டில் மட்டுமே தீர்ப்பு கூறியிருப்பதாகவும், மூல வழக்கின் விசாரணை தொடர்ச்சியாக நடைபெறும் என்றும் தெரிவித்த நீதிபதிகள் தீபாவளிக்கு சுற்றுச்சூழலை பாதிக்காத பட்டாசுகளை மட்டுமே வெடிப்பதற்கு அனுமதிக்க முடியும் என்பதை தெளிவுப்படுத்தினர்.

நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் மேலும் கூறியிருப்பதாவது:- தீபாவளிக்கு பட்டாசு வெடிப்பதில் கடந்த 2018-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி கட்டுப்பாடுகள் கடைபிடிக்கப்பட வேண்டும். பட்டாசு கட்டுப்பாடுகள் முழுமையாக கடைப்பிடிக்கப்படுகிறதா? என்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

வழக்கு விசாரணையின்போது பசுமை பட்டாசுகளில் எந்த மாதிரியான மூலப்பொருட்களை சேர்க்க வேண்டும் என்பது பற்றிய வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு எப்போது பட்டியலிடப்படும் என்று மனுதாரர்களும் எதிர் மனுதாரர்களும் கேட்டனர். இதற்கு பதில் அளித்த நீதிபதிகள் ஹேப்பி தீபாவளி என்று தெரிவித்தனர். காலையில் 6 மணியில் இருந்து 7 மணி வரையிலும், இரவில் 7 மணியில் இருந்து 8 மணி வரையிலும் என 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க அனுமதி அளிக்கப்படுவதாகவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

## சென்னை-நெல்லை வந்தே பாரத் ரெயில்:

# பிரதமர் மோடிக்கு, தெலங்கானா கவர்னர் தமிழிசை நன்றி

புதுச்சேரி,செப்.23-
சென்னை - நெல்லை இடையே வந்தே பாரத் ரெயில் இயக்கப்படுவதற்காக பிரதமர் மோடிக்கு தெலங்கானா கவர்னர் தமிழிசை நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறி இருப்பதாவது;

தென்தமிழக மக்களுக்காக மத்திய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம் நேரடியாக நான் வைத்த கோரிக்கையை ஏற்று சென்னை - திருநெல்வேலி இடையிலான வந்தே பாரத் விரைவு இரயில் சேவையை விரைந்து நடவடிக்கை எடுத்து நாளை 24-ம் தேதி தொடங்கி தென் தமிழக மக்களின் பயணங்களை எளிதாக்கிய பிரதமர் நரேந்திர மோடிக்கும், மத்திய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிற்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவை, சென்னை மற்றும் புதுச்சேரிக்கான பிரான்ஸ் நாட்டு துணைத்தூதர் லிஸ்டால்போட் பரே சந்தித்து, அடுத்த மாதம் நடைபெறும் கலாச்சார அமைப்பின் 70-வது ஆண்டு விழாவிற்கு அழைத்து, தமிழ்நாடு மற்றும் பிரான்ஸ் இடையேயான பொருளாதார மற்றும் கலை பண்பாடு குறித்து பேசினார். அருகில் துணைத்தூதர் புரோனா குயென், விஜயசரஸ்வதி உடனிருந்தனர்.



● சென்னையில் நேற்று, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில், வேலைவாய்பு மற்றும் பயிற்சித்துறையின் செயல்பாடுகள் மீதான துறை ரீதியான ஆய்வுக்கூட்டம் இயக்குநரக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச்செயலாளர் குமார்ஜெயந்த், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் கொ.வீரராகவராவ் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● சென்னை லயோலா கல்லூரி வளாகத்தில், மறைந்த முதல்வர் மு.கருணாநிதியின் நூற்றாண்டு விழா கருத்தரங்கத்தில், சட்டப்பேரவைத்தலைவர் மு.அப்பாவு, சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது என்ற தலைப்பில் சிறப்பாக உரையாற்றிய மாணவர்களை பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார். அருகில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, தலைமைக்கொறடா கோவி.செழியன் ஆகியோர் உள்ளனர்.

## நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற தாமதம்:

# உள்துறை செயலருக்கு ரூ.10,000 அபராதம் விதித்து மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, செப். 23-
பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு சிறப்பு நீதிமன்றம் அறிவித்த ரூ. ஒரு லட்சம் நிதி உதவியை வழங்குவதில் கால தாமதம் செய்த உள்துறை செயலருக்கு ரூ. 10,000 அபராதம் விதித்து ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியைச் சேர்ந்த பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த பெண் தாக்கல் செய்த மனுவில், நாங்கள் பட்டியல் இன சமூகத்தைச் சேர்ந்தவர்கள், நான் எனது கணவர் மற்றும் 3 குழந்தையுடன் வசித்து வருகிறேன். டிசம்பர், 2020-ல் எனது 7 வயது மகளை, எங்கள் பகுதியில் வசிக்கக்கூடிய வேலுச்சாமி என்பவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தினார். இது தொடர்பாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்து, போக்சோ சிறப்பு வழக்கில் அவரைக் கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம் குற்றவாளிக்கு 7 ஆண்டு சிறை தண்டனையையும், பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ. ஒரு லட்சம் நிதி உதவியும் வழங்க உத்தரவிட்டு தீர்ப்பளித்தது. சிறுமிக்கு இந்த ரூ. ஒரு லட்சம் நிதி உதவியை ஒரு மாதத்திற்குள் வழங்க வேண்டும் என சிறப்பு நீதிமன்றம் மார்ச் 2022-ல் உத்தரவு பிறபித்தது. அதன் பிறகு, நிதி உதவி தொடர்பாக நாங்கள் உள்துறை செயலருக்கு மனு அனுப்பினோம், மாவட்ட ஆட்சியருக்கு மனு அனுப்பினோம். ஆனால், எந்த பதிலும் இல்லை. எனவே, வறுமையில் வாடும் எங்கள் குடும்பத்திற்கு, நீதிமன்ற உத்தரவுப்படி ரூ. ஒரு லட்சத்தை வழங்க உத்தரவிட வேண்டும் எனக் கேட்டிருந்தார்.

இந்த வழக்கு ஐகோர்ட் கிளை நீதிபதி புகழேந்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ. ஒரு லட்சம் நிதி உதவி வழங்க சிறப்பு நீதிமன்றம் அறிவித்தும் இன்னும் வழங்கப்படவில்லை என்று வாதிட்டார். இதைக் கேட்ட நீதிபதி புகழேந்தி, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 6 சதவீத வட்டியுடன் உடனடியாக அந்த ரூ ஒரு லட்சம் நிதி உதவியை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார். மேலும், நிதி உதவியை வழங்குவதில் கால தாமதம் செய்த உள்துறை செயலருக்கு ரூ. 10,000 அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த 10 ஆயிரம் ரூபாய் அபராதத் தொகையையும் சேர்த்து சிறுமிக்கே வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

# கொசு உற்பத்திக்கு வழிவகுக்கும் நபர்களுக்கு ரூ.500 அபராதம்

## தமிழக சுகாதாரத்துறை எச்சரிக்கை

சென்னை, செப். 23-
பரவி வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் வகையில் நோய் தடுப்பு நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்தி உள்ளது. கொசு உற்பத்திக்கு வழி வகுக்கும் நபர்களுக்கு ரூ. 500 அபராதம் விதிக்கப்படும் என்று சுகாதார துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழகம் முழுவதும் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் கொசுக்கள், வைரஸ்கள், நுண்ணுயிரிகள் மூலம் பல்வேறு தொற்றுகள் பரவி வருகின்றன. குழந்தைகளும் அத்தகைய நோய்களால் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

காய்ச்சல், உடல்வலி தொண்டை வலி, சளி, இருமல், மூச்சு திணறல் உள்ளிட்ட அறிகுறிகளுடன் சிகிச்சைக்காக ஏராளமானோர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இதையடுத்து நோய் தடுப்பு நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்தி உள்ளது. இதற்கான சிகிச்சை கட்டமைப்புகளை விரிவுப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கொசு உற்பத்திக்கு வழிவகுக்கும் தனி நபர்கள், நில உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது அபராதம் விதிப்பதற்கான அறிவிப்பை பொது சுகாதாரத் துறை இயக்குனர் செல்வ விநாயகம் வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

மழை காரணமாக தமிழகம் முழுவதும் காய்ச்சல் பாதிப்புகளும், குறிப்பாக டெங்கு காய்ச்சலும் அதிகமாக பரவி வருகிறது. ஏடிஸ் கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் தமிழக பொது சுகாதார விதிகளின்படி அறிவிக்கை செய்யப்பட்ட நோயாக உள்ளது.

எனவே அரசு மற்றும் தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் தங்களிடம் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு டெங்கு உறுதி செய்யப்பட்டால் அது குறித்து சம்பந்தப்பட்ட சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் அவர்களுக்கு உரிய விதிகளின் படி அபராதம் விதிக்கப்படும். அதே போன்று கொசு உற்பத்திக்கு வழி வகுக்கும் வகையில் செயல்படும் பொதுமக்கள், நிறுவனங்கள், நில உரிமையாளர்கள், கடைகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். விதிமீறலின் தன்மையை பொருத்து அவர்களுக்கு ரூ. 500 வரை ஒவ்வொரு முறையும் அபராதம் விதிக்கப்படும். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# 2024 பொதுத்தேர்தல்: தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்த ஜனதா தளம்

## அமித்ஷா, நட்டாவை சந்தித்த குமாரசாமி


புதுடெல்லி,செப்.23-
இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் பொது தேர்தலை ஜனதா தளம் கட்சி, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இணைந்து சந்திக்க முடிவு செய்து இருக்கிறது. இதற்கான அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக வெளியாகி உள்ளது.

ஜனதா தளம் கட்சியின் மூத்த தலைவரும், கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதல்வர் எச்.டி. குமாரசாமி மத்திய உள்துறை அணைச்சர் அமித் ஷா மற்றும் பா.ஜ.க. தலைவர் ஜெ.பி. நட்டா ஆகியோரை நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பை தொடர்ந்து தேர்தல் கூட்டணி அறிவிக்கப்பட்ட நிலையில், தொகுதி பங்கீடு தொடர்பாக எந்த தகவலும் வழங்கப்படவில்லை.

தொகுதி பங்கீடு தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த முன்னாள் முதல்வர் குமாரசாமி, தொகுதி பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்தார். குமாரசாமி மற்றும் பா.ஜ.க. தலைவர்கள் சந்திப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் டுவிட்டர் தளத்தில் வெளியிடப்பட்டு இருக்கிறது.

தேசிய ஜனநாயக கூட்டணியின் அங்கமாக இருக்க ஜனதா தளம் கட்சி முடிவு செய்து இருப்பது மகிழ்ச்சியை அளித்து இருக்கிறது. அவர்களை நாங்கள் முழு மனதோடு வரவேற்கிறோம்.

இது தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் பிரதமர் மோடியின் புதிய இந்தியா, உறுதியான இந்தியா என்ற நோக்கத்தை வலுப்படுத்தும் என்று ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தானிடம், ரெப்கோ வங்கியின் தலைவர் இ.சந்தானம், நிர்வாக இயக்குநர் ஆர்.எஸ்.இசபெல்லா ஆகியோர் 2022-2023-ம் நிதியாண்டிற்கான தமிழக அரசின் பங்கு மூலதனமான ரூ.7.13 கோடிக்கான 20 சதவீத ஈவுத்தொகையான ரூ.1 கோடியே 42 லட்சத்து 60 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கினர். அருகில் கே.நந்தகோபால் உடனிருந்தார்.